JC
Y5926.Vm24,N2
N28.2.8
220499

## SUPPLEMENT TO THIS ISSUE.

# வெகுமுக்கியம் ! நல்லதருணம் ! !

## முற்றிலும் படிக்கவும்.

### "வேளாள மித்திரன் சந்தாதாரர்கட்கு"

1. வேளாளமித்திரனுக்கு சந்தாதாரர்களை சேர்க்துக்கொடுத்து ஆதரிப்பது வேளாள சமுகத்தை விருத்திசெய்வதாகும். சென்ற சிலமாதங்களாக சந்தாதாரர்கட்கு பத்திரிகை அனுப்பியும் சிலர் தங்கள் சந்தாத்தொகையை செலுத்தாதுள்ளார்கள். அடுத்தமாதம் முதற்கொண்டு பிறதி தமிழ்மாதம் 15, தேதியேசந்தாதாரர் கட்கு பத்திரிகை அனுப்பப்படும். இவ்வாண்டு சந்தாசெலுத்தாத அன்பர்கள். இம்மாதம் 25ம் தேதிக்குள் நமக்கு சந்தாத்தொகை அனுப்பும்பட்சத்தில் மகாத்மா காந்தி அடிகளால் இயற்றப்பட்ட "நீதிதருமம்" என்றபுத்தகம் இனாமாய் அனுப்பப்படும்.

இனாம் ! இனாம் !! இனாம் !!!

2. இரண்டு புதிய சந்தாதாரர்களைச்சேர்த்து பணம் அனுப்புபவர்கட்கு உயர்ந்த கிளேஸ்காயிதத்தில் அச்சடிக்கப்பட்ட "நால்வகைத் தோற்றத்தார் நன்மகாநாடு" என்றபுத்தகம் இனாமாய் அனுப்பப்படும்.

3. மூன்று சந்தாதாரர்களைச்சேர்த்து அனுப்புபவர்கட்கு உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 200 பக்கங்கட்கதிகமாயுள்ள "சுந்திரர் தேவாரம்" என்றபுத்தகம் இனாமாய் அனுப்பப்படும்.

4. நான்கு புதிய சந்தாதாரர்களைச்சேர்த்து பணம் அனுப்புபவர்கட்கு "ஒனாமிர்த்தகட்டளை" என்ற ஓர் அரியநூல் இனாமாய் அனுப்பப்படும.

5. ஐந்து புதிய சந்தாதாரர்களைச்சேர்த்து அனுப்புவர்கட்கு திருவடிப் புகழ்மாலை மலர். 1. மலர் 2 ஆகியஇரணடு புத்தகங்களும் அனுப்பப்படும்.

6. ஆறு சந்தாதாரர்களைச்சேர்த்து அனுப்புபவர்கட்கு, திருவடிப்புகழ்மாலை 1, 2. 3. ஆகிய மூன்றுபுத்தகங்களும் அனுப்பப்படும்

7. ஏழு சந்தாதாரர்களைச்சேர்த்து அனுப்புபவர்கட்கு சுந்திரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரம் ஏழாம் திருமுறையும், அப்பர் புகழ்மாலையும் அனுப்பப்படும்.

8. எட்டு சந்தாதாரர்களைச்சேர்த்து பணம் அனுப்புவர்கட்கு ஸ்ரீமதிபண்டிதை அசலாம்பிகை அம்மாள் அவர்களால் இயற்றப்பட்ட திலகர்மான்மியம் என்றபுத்தகம் அனுப்பப்படும்.

9. ஒன்பது சந்தாதாரர்களைச்சோத்து பணம்அனுப்புபவர்கட்கு இராமலிங்க சுவாமிகளால் இயற்றப்பட்ட ஜீவகாருண்ய ஒழுக்கமும், மனு முறைகண்டவாசகம் என்றபெரிய நூலும் அனுப்பப்படும்.

10. பத்து சந்தாதாரர்களைச்சேர்த்து பணம் அனுப்புபவர்கட்கு சென்னை சட்டகலாசாலை பேராசிரியர் திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை M. A. M. L. அட்வகேட் அவர்கள் எழுதிய அப்பர்சுவாமிகள் சரித்திரம் அனுப்பப்படும். [உயர்ந்தபதிப்பு].

11. 11க்கு மேல் 14 சந்தாதாரர்கள் வரையிலும் சேர்த்து அனுப்புபவர்கட்கு ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மாள் அவர்களால் இயற்றப்பட்ட காந்தி புராணம் என்னும் நூல் அனுப்பப்படும் [உயர்ந்த பதிப்பு]

12. 14க்கு மேல் 18 சந்தாதாரர்கள் வரையிலும் சேர்த்து அனுப்புபவர்கட்கு நவசக்தி ஆசிரியர் திரு. கல்யாணசுந்திர முதலியார் அவர்களால் இயற்றப்பட்ட "தமிழ் தென்றல்" என்ற நூல் அப்பப்படும் [480 பக்கங்கட்கு அதிகமாயுள்ளது]

13. 18 சந்தாதாரர்களுக்கு மேல் சோத்துபணம் அனுப்புபவர்கட்கு திரு. கல்யாண சுந்திர முதலியார் அவர்களால் இயற்றப்பட்ட கீழ் கண்ட புத்தகங்களில் ஏதேனும் இரண்டு புத்தகங்கள் அனுப்பப்படும். [வேண்டிய புத்தங்களை குறித்து அனுப்பல் வேண்டும்.] பெண்ணின் பெருமை—முருகன் அல்லது அழகு சைலத்தின் சமரசம்,—என்கடன் பணி செய்து கிடப்பதே,—கடவுள் காட்சியும்தாயுமானரும்.

விலாசம் :—

"வேளாள மித்திரன்" ஆபீஸ்

மதுக்கரை போஸ்டு
போத்தனூர் மார்க்கம்,
கோயமுத்தூர் ஜில்லா.

குறிப்பு. சந்தா சேர்த்து அனுப்புபவர்கட்கு இனமாய் அனுப்பும் புத்தகங்கள் யாவும் உயர்ந்த காயிதத்தில் அச்சடிக்கப்பட்டவைகளே. இனமாய் அனுப்பும் புத்தகம் ஒவ்வொன்றும் அவசியம் படிக்கவேண்டியவைகளே.

நமது மித்திரன் வருட சந்தா { உள் நாடு ரூ. 2 / வெளி நாடு ரூ. 2-4 }

உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் சந்தாதார்களைச்சேர்ப்பதற்கு நல்ல ஏஜண்டுகள் தேவை. அதிக கமிஷன் கொடுக்கப்படும். விவரத்திற்கு உடனே எழுதவும் :—

இதை வாசித்து விட்டு உங்கள் அன்பர்கட்கும் கொடுக்கவும்.

The Magazine Press, Chingleput.

28499

உ
சிவமயம்

# வேளாள மித்திரன்.

உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

மலர் 2 } சுக்கில-ஹு கார்த்திகை-மீ 15உ. 1929-ஹு நவம்பர்-மீ. { இதழ் 8

## வேளாளர் பெருமை.

தேவாலயந்தோறும் திருவிழாப்
  பூசையும், செப்பரிய பிர்மாலயத்து
தெய்வமறை யோர்செய்யும் நித்தநை மித்தியமும்,
  திரிசந்தி யாகங்களும்,
பூவாளு மன்னர்சது ரங்கபல முதலான
  பொக்கிஷ மிகுஞ்செல்வமும்,
பொன்வெள்ளி தனதானியம்பல சரக்கினால்
  பொருளாக்கும் வணிகர் தொழிலும்,
கோவாதி சோடச மகாதான தருமமும்,
  குவலயத் தனைவர்சுகமும்,
கோளாறு கொண்டுழும் வேளாளர் உழுபடைக்
  கோலதன் பெருமையன்றோ ?
ஆவாற் கறந்தபா லபிஷேக னேயனே!
  அருள்பெறு வசந்தராயர்
அண்ணவி னிற்றுதிசெய் யுண்ணா முலைக்குரிய
  அண்ணா மலைத் தேவனே!

—அண்ணாமலைச்சதகம்.

21, N 2 8
N 29.2

# திருமுருகாற்றுப்படை உரை நடை.

(பண்டிட் ம. சி. சபாபதி முதலியார்) (முன் தொடர்ச்சி)

திருவாவினன்குடி.

உலகத்தார் புகழ்தற்குரித்தான படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூவகைத்தொழில்களும் நான்முகனுக்கு முருகப்பெருமான் இட்ட சாபங்காரணமாக நடைபெறுதொழிய திருமாலும், முக்கட் செல்வனும் தத்தம் தொழிலில் முன் போலவே கவலைமையகிப்பதோடு விட்டுணுவின் உந்தியங்கமலம் பெற்று ஊழிக்காலத்திலும் கெடுதல் அடையாத நான்கு முகங்களையுடைய பிரமதேவனை அவனின் பழைய நிலையில் நிறுத்த வேண்டிக் குறைபாட்டை நீக்கும் பொருட்டு இறைஞ்சா நிற்கவும், தேவர் கோனும், பன்னிரண்டு சூரியர்கள், உருத்திரர்கள், எட்டு வசுக்கள், இரண்டு மருத்துவர்கள் ஆகிய முப்பத்து மூவரும் பதினெட்டு வகையான உயர்ந்த பதவிகளைப் பெற்ற பதினெண் கணங்களும் காணவும், கந்தர்வர் தம்மகளிரோடு யாழை வாசித்துப்பாடவும், முனிவர்கள் முன்னே செல்லவும், இருந்தருந் தன்மையில் ஆவினன் குடி என்னும் தலத்தில் குற்றமில்லாத கற்பையுடைய தெய்வயானையாருடன் சிலகால் இருத்தற்கும் உரியன்.

திருமால்:—கருடனைத்தன்மேற் கொண்ட நீண்ட கொடியையுடையவன். அக்கருடன் எத்தன்மைத்தென்றால், பலவரிகளையும் வளைந்த சிறகுகளையுமுடையது. அதன் வலிமையோவென்னில், நச்சுப்பைக்குள்ளே கிடந்து முளைத்தும், துளையையுமுடையதாய் வெள்ளிய நிறத்தைக்கொண்ட பல்லையும், நெருப்பைப் போல வெப்பத்தைக்கொடுக்கும் பெருமூச்சையும் கண்டார்க்கு அச்சந்தோன்றக் கொடுமையான வலிமையையுமுடைய பாம்பு இறந்து படும்படி அடிக்கும் வலிமையைக் கொண்டது * நான்கு பெரிய தேயங்களையுடைய ஊர்களைக்காக்க வேண்டும் என்னும் ஒன்றையே எப்பொழுதும் விரும்பும் செல்வன்.



முக்கட்செல்வன் :— வெண்மை நிறங்கொண்ட ரிடபத்தைத்தன் கொற்றக்கொடியிற்கொண்டு அக்கொடியை வெற்றிக்கரத்தில் உயர்த்தி எடுத்தவன். உமாதேவி ஒருபாகத்தில் அமர்ந்துள்ள செல்வன். இமைகள் என்றுங்குவியாத மூன்று கண்களையுடைய செல்வன். திரிபுரத்தை எரித்துப்பகைமை அதிகங்கொண்ட செல்வன். பலரும் புகழ்கின்ற வலிமை கொண்ட தோளை யுடையவன்.

தேவர் கோன் :— ஆயிரங்கண்களையுடையவன். நூற்றுக்கணக்கான பல யாகங்களை விரும்பிச்செய்து முடித்தவன். அதனால் பகைவர்களைக்கொன்று பெற்ற வெற்றியையுடையவன். ஐராவதம் என்று எல்லாராலும் உயர்த்துச் சொல்லப்பட்ட வெள்ளையானையின் கழுத்தில் ஏறி திருமகள் விளங்கும்படி வீற்றிருப்பவன். அவ்வைராவதம் தன் தலையினின்று வளர்ந்து ஏந்தியிருக்கின்ற நான்கு கொம்புகளையுடையது. அழகிய நடையை யுடையது. நிலத்தில் கிடக்கும் படித் தொங்கி வளைந்த பெரிய துதிக்கையைக்கொண்டது.

முப்பத்துமூவர் பதினெண்கணங்கள் :— ஒரேபொருளைப்பல வகையாகப் பிரித்துக்காட்டுங்கால் அப்பொருள் பலவகை வேறுபட்ட தோற்றமுடையதாயக் காணப்பட்டும் உண்மையில் வேறுபாடில்லாதிருப்பது போலத்தம்முள் மாறுபாடில்லாத அறிவையுடையவர்கள்.* நால்வகைப்பட்ட இயல்பையுடையவர்கள். பதினெட்டு வகையான உயர்ந்தபதவிகளைப் பெற்றவர்கள். இம்முப்பத்தி மூவர்களும் பதினெண்கணங்களும் ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் அழகுபெற்றுத் தோன்றினாற் போல அவ்வாகயத்தே சஞ்சரித்துக் கொண்டிருப்பவர்கள்.

முனிவர்கள் :— மரவுரியை ஆடையாக உடுத்தியவர்கள். அழகாலும், உருவத்தாலும், நிறத்தாலும், வலம்புரிச்சங்கையொத்த வெள்ளிய நரைமயிர் முடியையுடையவர்கள். எக்காலத்தும் நீராடுதலின் அழுக்கற விளங்கும் வடிவையுடையவர்கள். மான்தோலைப்போர்வையாக்க் கொண்டவர்கள். விரதங்களால் ஏற்பட்டபட்டினியால் தசையில்லாமல் மார்பில் எலும்புகள் கோவையாகத் தோன்றுகின்ற உடலைக்

கொண்டவர்கள். எப்பதார்த்தத்தையும் அருந்துவதற் குரித்தான அநேக நல்ல பகற்பொழுதுகளிலும், சேர்ந்தாற் போல அறவே உணவை நீக்கினவர்கள்.

பகைமையோடு நெடுங்காலம் நிற்கும் செற்றத்தை நீக்கிய மனத்தினர். பலவற்றையுங் கற்ற புலவோர்களால் ஒரு சிறிதும் அறியமுடியாத இயற்கை அறிவையுடையவர்கள். அப்புலவர்களுக்குத்தாம் எல்லையென்று சொல்லும்படித் தலைமை பூண்டவர்கள். ஆசையோடு கூடிய சினத்தையும் நீக்கின, மெய்யறிவையுடையவர்கள். தவத்தான் மெய்வருத்தம் உளவேனும் மனத்தான் ஒரு சிறிதும் உணராத இயல்பையுடையவர்கள். ஒருவருடனும் வெறுப்பில்லாத நல்ல அன்பு கொண்ட அறிவையுடையவர்கள்.

கந்தருவர் :—நுட்பமான புகையை முகந்தாற்போன்ற நிறங் கொண்டு தெய்வத்தன்மையால் அழுக்கேறாத தூய உடையை உடையவர்கள். அரும்பு அவிழப்பெற்ற மலர்களால் கட்டப்பட்ட மாலை சூழ்ந்த மார்பையுடையவர்கள். உருக்காற் செய்த காதாலே சுருதியைப்பொருந்த நரம்பைக்கட்டி வாரால் சுற்றப்பட்ட நல்லயாழின் இசையிலே பயிலுகிறவர்கள். அன்புள்ள மனத்தோடு எக்காலமும் இனியவார்த்தைகளைச் சொல்லுகிறவர்கள்.

அவர்மகளிர் :—மக்களுக்குரிய நோய் உண்டாகாத வண்ணம் சிருட்டிக்கப்பெற்ற உடம்பையுடையவர்கள். மாவினது ஒள்ளிய தளிரை ஒத்த மேனியையுடையவர்கள். விளங்குந்தோறும் பொன் உரை விளங்கினாற்போல காணப்படுகிற தேமலையுடையவர்கள். பார்ப்பதற்கு அழகாய் ஒளி வீசுகின்ற பதினெண் கோவையாகிய மேகலாபரணத்தையணிந்தவர்கள். தாழவேண்டிய விடம் தாழ்ந்தும் உயரவேண்டிய விடம் உயர்ந்துமுள்ள அல்குலையுடையவர்கள். குற்றம் சிறிதுமில்லாது விளங்குகின்றவர்கள்.

## திருவேரகம்.

அந்தணர்கள் தாங்கள் வழிபடுங்காலங்களையறிந்து தோத்திரங்



களையெடுத்து ஓத அவைகளுக்குப் பெரிது மகிழ்ந்து ஏரகம் என்னும் மலைத்திருப்பதியில் உறைதலுமுரியன்.

அந்தணர்கள் சிறப்பு :—பழையகுடியிற் பிறந்தவர்கள். அவர்களின் தாயுந்தந்தையும் பலவகையிலும் நல்ல மேன்மையையுடைய குலங்களைச் சேர்ந்தவர்களென்று உலகத்தார் மதிக்கற்குரிய குடியில் உதித்தவர்கள். உபநயனத்திற்கு முன்பு ஒரு பிறப்பையும், பின்பு ஒரு பிறப்பையுங்கொண்ட இரு பிறப்பாளர்கள். தங்களுக்குரிய அறுவகைத்தொழில்களையும் வழுவாது நடத்துகிறவர்கள். தங்கள் நல்ல இளமைப்பிராயத்தை நாற்பத்தெட்டு ஆண்டளவும் வேதங் கூறிய பிரமசரிய நெறியில் போக்கினவர்கள். எப்பொழுதும் அறத்தையே எடுத்துக்கூறும் கொள்கையையுடையவர்கள். ஆகவனீயம், தக்கிணாக்கினி, காருகாபத்தியம் என்று அந்தணர்க்குரியனவாகிய முத்தீயினாலுண்டாகிய செல்வத்தையுடையவர்கள், மூன்று நூலைக்கொண்டு முப்புரியாகத் திரித்த ஒன்பது ஒன்பது நூலைக் கொண்டமூன்று நுண்ணிய பூணூலைக்கொண்டவர்கள். நீராடுங் காலத்தில் தோய்க்கப்பட்ட ஆடை உடம்பிலேயே கிடந்து உலரும்படி உடுத்தவர்கள். முருகப்பெருமானைப் புகழ்ந்து தலைமேல் ஏறிய கையையுடையராய் ஆறெழுத்துக்களையும் தன் அகத்தேகொண்ட மந்திரத்தைக் கேட்டற்கு அருமையாக மறைவுடன் நா அசைவு கொள்ளும் அளவே பயின்று உச்சரித்து மணமிக்கநிய பூவை எடுத்துத் தோத்திரங்களை கூறுபவர்கள். தொடரும்.

# ஆரோக்கிய தரிசனம்

## காலைக் கடன்

(டாக்டர் D. S. P. ராஜா)

நவேகான் தாரயேத் தீமான். Ch. Sut. Ch. VI

இரண்டடக்கோம்; ஒன்றைவிடோம். (தேரையர்)

“இருதயமொன்றை உடலினின்றும் தனியாகப் பிரித்தெடுத்து உரியவோரிடத்தில் வைத்து, ஒக்குமுறையில் அதற்குணவூட்டி,

கவனித்துவந்தேன். சிலபோழ்து அதுவேலை செய்துவந்ததெனினும், பையப்பைய அதன் செயலில் அயர்வுகண்டு, தளர்ந்து, பின் நின்றுவிட்டது. எனவே, மற்றொரு இருதயத்தை யெடுத்து முன்போல அதற்குணவூட்டியதன்றி, அதன் பேவலிகளை Muscle· அடிக்கடி தூயநீரால் கழுவிக்கொண்டே வந்தேன். இதன் பயனாக அது சற்றேனும் தளர்வுறாது, முன்னினும் ஊக்கமுடனுழைக்கத் துவங்கியதோடு, அயர்வு மூப்புகளின்றி செயலினும் கொழுமையினும் சிறந்தோங்கி வந்தது. இதனால் அவயவச் சேயலா லேற்படும் விஷத் தன்மையான கழிவுப் போருள்களை அவ்வப்போது நீக்குதல் உணவினும் அதிஅவசியமெனவும் மலங்களின் சேர்க்கையே மரணத்திற் கடிகோலுவதெனவும் அவற்றை அகற்றவே தேகத்தை நிறைநெடுநாள்நிலைத்திருக்கச் செய்யுமுயர்ஸாதன மெனவுங்கண்டுஉறுதிபூண்டேன் என நவின ஆராய்சி யுலகில்பெருங்கீர்த்திவாய்ந்து, விளங்கும் மேனாட்டு (Rockfeller's Institute) ராக்பெல்லர் கழகத்தின் ஆராய்ச்சியாளரும்,' அத்துறையில் ஒப்புயர்வற்றவரெனவே உலகம் போற்றி (Nobel Prize) நோபில்பரிசு வழங்கப் பெற்றவருமான Karl Simon கார்ல் சைமன் என்ற அறிஞர் எடுத்தோதுகிறார். இவர் நிலைகாட்டு முண்மை என்ன? மலநீக்கமே நோய்நீக்கமென்பதல்லையோ ?

இந்நுண்ணியஉண்மையை 2000 ஆண்டுகளுக்குமுன்நம்முன்னோர் கண்டதுடன், அந்தச்சப்பொருள்களைத்தடைப்படுத்தாதுநாடோறும் கழித்தலவசியமெனநியதியு மேற்படுத்தி வற்புறுத்தினர். உடலினுட்புறத்துள்ள ஆசயமலங்கள் 14 வகையில் தாமாகவே இயற்கையால் கழிக்கப்படுகிறதெனவும், வேண்டுவதெல்லாம்நாமதனை தடைபடுத்தலாகாதென்றே "நவேகான் தாரயேத் தீமான்" என்றனர். இம்மலங்களுக்கு வேகங்களென ஆயுள்வேதம் பெயரிட்டழைக்கிறது அவை 1 மலம் (Excreta), 2 மூத்திரம் (Urine), 3 அபானவாயு (Wind), 4 தும்மல் (Sneezing) 5 ஏப்பம் (Belching,) 6 கொட்டாவி (Yawning,) 7 பசி (Hunger,) 8 தாகம் (Thirst) 9 நித்



திரை (Sleep), 10 சிறு இருமல் (cough,) 11 பெருமூச்சு (hard breathing) 12 வாந்தி (Vomiting,) 13 கண்ணீர் (tears,) 14 சுக்கிலம் (Semen,) என்பன.

இவை இயற்கையாய்த் தோன்றுஞ்சமயத்து புறத்தகற்றுக்காரணத்தால் உடற்குண்டாகும் நோயத் திரளை ஒருவாறு உணர்ந்தாலன்றி, அவற்றை நீக்குவதன் அவசியம் புலப்படாது; மேலும் ஆரோக்ய தரிசனத்திற்கு மலநீக்கமே அதிமுக்கிய மானது. ஆதலால் சற்று விரிவுறினு மவற்றைக் காண்டலமையுமன்றோ.

## வேக நிரோதனத்தாலுறும் நோய்த்திரள்.

1. அபானவாயு வைத்தடுப்பதால் குன்மம், குவு, மூத்திர வழியில் வெளிப்படாது மலங்கள் மேல் நோக்கல், உதாவர்த்தம் வயிற்றுவலி, சரீரவாட்டம், மூத்ரமலத்தடை. கண்ணொளி மழுங்கல், ஜாடராக்னி மந்தம், இருதய நோய்கள் இவை தோன்றும்

2. மலம்:—இதைத் தடுப்பதால் காலிலுள்ள ஆடுச்சதை முறுக்கிக் கொள்ளல், பீநசம் போன்ற ப்ரதிச்யாயம் சிரோ வேதனை. மேல்மூச்சு, ஆசனக் கடுப்பு, இருதய நடையில் தளர்வு, மாரடைப்பு, வாய் வழியாக மலம் வெளியாதல் ஆகிய இவையும் வாத நிரோதனத்தின் பிற நோய்களு முண்டாதல் நிச்சயம்.

3. மூத்திரத்தைத்தடுப்பதால் அஸ்மரி (Stone gravel) வஸ்தி (bladder) குறி, துடைச்சந்துகளில் வேதனை, இவற்றோடு வாத நிரோதத்திற்கு கூறிய ரோகங்களும் பெரும்பாலுமுண்டாகின்றன.

4. ஏப்பத்தைத்தடுப்பதால் அரோசகம், ருசியின்மை. உடம்பு நடுக்கம், இருதயம், மார்பு இவைகளில் அடைப்பு, வயிற்றுப் பொருமல், இருமல், விக்கல், ஆகியவை நேரும்.

5. தும்மலை அடக்குவதால் தலைவலி, பஞ்சேந்திரிய பலவீனம், பிடரிவலி, அர்திதம் (Facial Paralisis) இவை யுண்டாகும்.

6. தாகத்தைப்புறக்கணித்தால் வாய் உலர்வு, தேக இளைப்பு, செவிட்டுத்தனம் or காதடைப்பு, மயக்கம், தலை சுற்றல், இருதய நோய் இவை உற்பவிக்கும்.

7. பசியை அடக்குவதால் தேகத்தளர்வு, அரோசகம், உடல்வாட்டம், இளைப்பு, உடலில்வலி, தலைசுற்றல் இவைகிளைக்கும்.

8. நித்திரா பங்கத்தால் மயக்கம், தலை, கண் இமைகளின் பாறம், சோம்பல், கொட்டாவி, உடலெங்கும்வேதனை, இவைஎழும்.

9. இருமல் :— திடீரெனத் தோன்றும் பொடியிருமலைத் தடுப்பதால் அதே இருமல் விருத்தியாதல், ஸ்வாஸ நோய், ருசியின்மை, இருதயநோய்கள், க்ஷயம், விக்கலாதிய முளைக்கும்.

10. சிறமத்தாலுண்டாகும் ஆழ்ந்த மூச்சை விலக்குவதால் குன்மம், இருதயநோய், மூர்ச்சை யிவையுண்டாகும்.

11. கொட்டாவியைக்கடுப்பதால் தும்மலை யடக்குவதாலுண்டாகும் நோய்கள் தோன்றும்.

12. கண்ணீரைப்பெருகவிடாமல் தடுத்தால் பீநசம், கண்ணோய், தலைவலி, இருதய ரோகம், மந்யாஸ்தம்பமென்னும் கழுத்துப்பிடிப்பு, அரோசகம், தலைச்சுற்றல், குன்ம மாதிய வியாதிகள் நேரும்.

13. வாந்தியைத்தகைவதால் விஸர்ப்பம், கோடம், வியங்கமென்னும் சர்மரோகங்கள், குட்டம், கண்ணோய், பாண்டு, ஜ்வரம் காசம், ச்வாஸம், இருதயத்துடிப்பு, விக்கமாதிய விளையும்.

14. சுக்கிலத்தை மறிப்பதால் இந்திரிய ஸ்கலிதம், மர்ம ஸ்தானத்தில் வேதனை, வீக்கம், ஜ்வரம், இருதய வேதனை, மூத்திர அடைப்பு, பலவீனம், அண்ட விருத்தி (Swelling of Scrotum,) கல்லடைப்பு, நபும்ஸகம் (Sterility) இவை கிளைக்கும்."

குறிப்பு :— இந்திரிய கோளங்களினின்று ஏற்கனவே வெளிப்பட்ட சுக்கிலத்தை இடைமறிப்பதாலேயேகூறியநோய்களுண்டாகும். இது பிராணதாதுவாதலால் பிரம்மசரிய யொடுக்கத்தா அதனை அவசியம் காத்தல்வேண்டுமெனவே " ஒன்றை விடோ



என அழுத்திக் கூறியதை யோர்க. (அஸ்டாங்க ஹிருதயம்) அIV

பிரஹ்மமுஹூர்த்தே உத்திஷ்டேத் ஸ்வஸ்தொளரக்ஷார்தம் ஆயுஷ: Sush. Ch. 24-v-3

ந வேகான் தாரயேத் தீமான் :—

ஏகைகம் கர்ஷயேத் தந்தம்

அப்யங்கம் ஆசரயேத் நித்தியம் சஜராஸ்மராவாதா, த்ருஷ்டி பிரசாத புஸ்யஹி, ஸ்வப்ன ஸ்த்வக், தாருட்யருத்

சிராஸ்வண பாதேஷூதம் விசேஷசேன சீலயேத் உத்வர்த்தனம் கபஹரம் போதோபிரவில்லாபனம்.

சாதுவேஷ அனுபாத் ஜாங்கலம் சிசேஸ் உபம்

பிரசங்காத் காத்ரசம்பர்ஷாத், நிஸ்வஸத் சகபோஜனாத் ஏக சயனாத்சைவ வஸ்த்ர, மால்யனு, லேபனாத் குஷ்டம் ஜவஸ்ச், நேத்ர பிஸயந்தச; ஔபசர்கிர ரோகஸ்ச் சங்க்ராமந்தி

நரம் நரம்

பலாதிஷ்டாமை ஆரோக்யம் தஸ்மாத் பலம் யத்ன யேன பாலயேத்.

அரீ ஆயாச ஜனனம் கர்ம வியாயாம சம்கிதம் வயோ, ரூப, குணைர்ஹீண மப்தி, குர்யாத் ஸூதர்னம்.

வியாயமம் குர்வதே நித்யம் விருத்தமபி போஜனம் விதத்தம் வஹிர்தோஷம் பரிபச்சையதி.

தாரயேத் உதவேகான் ராகாதீனன் ஜிதேந்திரியஹ.

ஹிதம் மிஷம்

லேகே சமஸ்தோ சுகினோபவந்து.

## தீர்த்த யாத்திரை என்பதென்ன?

இந்துக்களின் தீர்த்தயாத்திரைக் கென பெரியோர் குறிப்பிட்ட தலங்கள் எண்ணிறந்தன :—

அதிர்புனல் பிரயாகை, விளங்கு மோங்காரம்,

அவந்தி, காலஞ்சர மயோத்தி,

மதுரை, கோகர்ணம், புட்கரம், மகராலயம்,
துவாரகை, வளக்காஞ்சி,
டதிரிகாச்சிரமம், திரியம்பகம், கங்கை
வேலையிற் புகுவிடம், சிந்து,
நதிசாத்தொடொன்றிடம், குருக்ஷேத்ர
மொடு, நைமிசாரண்யம்
விரிபுனல் கங்காத் துவாரம், நற்றுறக்கம்
விடருள் நீடிரு சைலம்,
பிருகுகச்சம், சீர் செற்றுயர் பிருகுதுங்கம்
என்ற இன்னன வன்றி,
தறைபுகழ் தாரா தீர்த்தம், வெண்டரங்கம்
சத்த கோதாவரித் தடமென்று,
உறைபெரு கடவுட்தீர்த்தம், மாநிலத்து
உண்டென ஓதினர் உயர்ந்தோர்"

எனவே, தானெத்தகைய துன்மார்க்கனாயினும், கொலையுருவாகவந்த பரம சண்டாளனாயினும் மேற் கூறிய தலங்கள் சிலவற்றினுக்குச்சென்று மொட்டையடித்து, தீர்த்தத்தில் முழுகி, விபூதியோ திருமண்ணோ இட்டு, கோயிலுட்புகுந்து சுவாமிக்கு அருச்சனையோ அபிஷேகமோ செய்து விட்டால், செய்தபாவங்கள் அனைத்தும் தொலைந்து மோக்ஷம் கிடைத்து விடுமென நினைக்கிறார்கள். இப்புண்ணிய தலங்களுக்குச்சென்று திரும்பிய பிறகேனும் தம் வாழ்க்கையைத் திருத்திச்சன்மார்க்க ராவது காணோம். யோசிக்குமிடத்து இவை 'முக்தி தருமென்ற நினைவே' பலரைமீண்டும் மீண்டும் பாவ வழியில் சஞ்சரிக்கத் தூண்டுவதாகவு மிருக்கிறது. இது கொண்டே, பரம பவித்திரமான தீர்த்தயாத்திரையுமின்று வசைநெருப்பிற்கும் கண்டனப் பீரங்கிகளுக்கும் இலக்காக நிற்கிறது. ஆகையால் இதனை, எவ்வுயர் நோக்கங் கொண்டு பெரியோர் வகுத்தார்களெனக்காண்போம்.



## ஆரோக்கியம்

மன்னார்சாமி விக்கிரகங்களைப்போல இருந்தவிடம் விட்டு நகராத பெரியோரும், நடந்து சென்றால்தான் யாத்திரை பலன் தரும், என்ற ஐதீகத்தால், சிரமம் பட்டாவது நடக்க முற்படுகின்றனர். இதனால், வியர்வை கொட்டும் சிறந்த தேகாப்பியாசம் ஏற்படுகிறது. சற்று இளைப்பாறியதும் தீர்த்தமென்னும் லோகப்பொருட்களின் சேர்க்கையான குளிர்ந்த ஜல ஸ்நானத்தால் உடல் வன்மை மிகுகிறது. விரதமென்னும் பட்டினியாலும் லகு ஆகாரங்களாலும் கொழுப்பு கரைகிறது. தூயகாற்றும், சிந்தனையின்மையும் ஆரோக்கியத்திற்கு எவ்வாறு பேருதவி செய்யுமென்பதை விரிக்க வேண்டியதில்லை. சுருக்கின் பருத்த உடலினருக்கு தீர்த்தயாத்திரையை விடச்சிறந்த மருந்து உலகிலே உண்டோ? மற்றவர்க்கும் இது பல வழிகளில் உடற் சுகம் தருவதாகும்.

## உலகஞானம்

"உலகத்தோடொத்து வாழாதவர்
பலகற்றும் கல்லாதவர்''

என்பது வள்ளுவர் வாக்கு. இந்த 'உலகம்' என்பதற்கு சாதாரண அருத்தம் கொண்டாலும் பொருந்தும்; ஏனெனில் எத்தனை புத்தகங்களைத் துருவியோடிய புழுவானாலும் அனுபவ ஞானமின்றி 'உலகத்தோடு ஒத்து வாழ முடியாது. யாத்திராமார்க்கத்தில் பலவேறு ஊர்கள், தேசப்பகுதிகள், மலை, ஆறு, முதலியவைகளைக்கடக்க நேரிடுவதால் அவ்வப்பகுதிகளின் பரப்பு, வளமை விளைவு, இயற்கைவனப்பு முதலிய பூகோள ஞானம் கிடைக்கிறது. புதுமையால் தூண்டப் பெற்றவராய் ஆங்காங்குள்ள பழைய கட்டிடங்கள் முதலியவற்றைக்கண்டு அத்தேச சரித்திரங்களையும் அறிகிறோம். அங்குள்ள ஜனங்களிடை பழக நேரிடுவதால் அவருடைய பாஷை, உணவு, நடையுடை பாவனை, வழக்கங்கள் முதலியவற்றைத்தெரிந்து கொள்ளுகிறோம். இவற்றில் சிறந்தன வற்றை நாமும்

ணைக்கொள்ள நினைவும் சமயமும் கிடைக்கிறது. 'காணும் வஸ்துக்களின் பரிணாமமே மனிதன்,' என்ற எவ்பரிபிரபுவின் புகழ்ச்சிக்கு இலக்கான இந்தயாத்திரையால் ஏற்படும் நன்மைகள் அனைத்தையும் தொகுப்ப தெனின், மிகநீளும். அநுபவ ஞானக்கரும் சிறந்த கலாசாலை யென நினைத்தே மேனாட்டார் அடிக்கடி தேசசஞ்சாரம் செய்துவருகிறார்கள். இதன்மேன்மையைக் கருதியேபண்டை இந்தியமாணவரும் குருகுலவாழ்வு முடிந்து விவாகம் செய்து கொள்வதன் முன்பு யாத்திரை செய்ய வேண்டுமென்ற விதியு மிருந்தது. இன்றும் விவாககாலத்தில் மணமகன் யாத்திரைபோவதென்றிருக்கும் சடங்கும் இதன் உண்மையைப்புலப்படுத்தும். ஆனால் இத்தகைய நன்மைகளோடு தீர்த்தயாத்திரையில் இந்துக்கள் பெறவிரும்பிய அதியுத்தம பொருளும் ஒன்று உண்டு. அதுதான் ஆத்ம ஞானமென்பது.

## தீர்த்த உண்மை.

தீர்த்தமென்ற பதத்திற்கு அகன்ற வொன்றைக்கடந்து செல்வதற்கு உதவிசெய்யும் ஓர் கருவி யென்பதே மூல அருத்தமாகும். அதாவது மாற்றறிய தொல்பிறவிக்கடலை நீந்திச்செல்ல உதவி செய்வதே தீர்த்தம் எனவழங்கப் பட்டது. 'தீர்த்தம் வெருவரு பாவமென்னும் விறகினுக்கு எரியாமன்றே,' என்பது பரஞ்சோதியாரின் புனிதவாக்கு. இப்பொருள் கொண்டே நம் பெரியார் தீர்த்தச் சொல்லை வழங்கியிருப்பதாக நிறுவபோதிய சான்றுகளுண்டு. உதாரணமாக வடமொழிக் கலாநிதியான தயானந்த சரஸ்வதியார் தம் சத்தியார்த்த பிரகாசத்தில் வேதங்களையும் பிற உறுதி சாஸ்திரங்களையும் கற்றல், பண்டிதரோடும் நீதியான்களோடும் உறவு, பொதுஜனஊழியம்; ஒழுக்கங்குன்றாவாழ்க்கை, யோகாப்பியாசம்; காமாதிகளினின்று விடுதலை; மனோவாக்கர்ம சுத்தி; பிரம்மசரிய விரதம் தந்தை, தாய், குரு, உத்தம அதிதிகளிக்கு ஊழியம், கடவுள் வழிபாடு; மனசாந்தி; பஞ்ச புலன் அடக்கம்; இனிமை; சுறுசுறுப்பு; இகபர ஞானங்களை ஈட்டல்; இன்னுமிவைபோன்ற நற்குணங்களையடைதல்;



அதன்வழி நடத்தல் ஆகிய சிறந்த காரியங்களே தீர்த்தம் எனப்படும்; ஏனெனில் இவையே துக்கபாவசாகரங்களைக் கடக்கஒருவனுக்கு உதவிசெய்யக் கூடியவை. பாவசமுத்திரத்தையும் துன்பக் கடலையும் நீந்திச் செல்வதற்கு உபயோகப்படுவதே தீர்த்தம் என்றிருப்பதால் கேவலம் நிலமும் (தலங்கள்) நீரும் (தீர்த்தங்கள்) தீர்த்தங்கள் என அழைக்கப்படத் தகுதியுடையதல்ல. பூமிக்கும் ஜலத்திற்கும் இத்தகைய சிறந்த குணங்களில்லை. வேண்டுமானால் இறக்கத்துணிந்தவனுக்கு ஜலம்உதவிசெய்யலாம். நதி அல்லது சமுத்திரத்தைக் கடக்கக்கருவியான படகு அல்லது கப்பலை தீர்த்த மென்னலாம். ஞானாசாரியனையடைந்து பிரம்மசரியத்தவராமல் கற்பவர்கள் தீர்த்தமாகுவதாகவே (சமான தீர்த்தவாசி) வடமொழிக்கு அகத்தியனான பாணினி முனிவரும் கூறியிருக்கிறார்.

உண்மையான வேதசாஸ்திரங்களை கற்பவருக்கும், ஒழுக்கந்தவறாத வாழ்க்கையுடைய சத்திய சீலருக்கும், உணவு உடை முதலியவற்றைத்தானமாகக்கொடுத்து, அதற்குபதிலாக அவ்வுத்தமரிடமிருந்து ஞானத்தை ஜனங்கள் பெறட்டும், என யஜுர் வேதம் XVI விதிக்கிறது. ஆகையால் இத்தகைய ஞானிகளே தீர்த்த மென்று அழைக்கத் தகுதியுடையவர்கள்" என இதன் உண்மையைவிரிக்கிறார். இதனையே

பொறிவழிப் புலன் செலாதடக்கிப் புந்தியை
நிறைபரம் பொருளிடை நிறுத்து நின்மலர்
உறைவிட மல்லதை யுள்ள தாங்கொல்லோ
வெறிபுனற் றீர்த்தமென் றியம்பப் பட்டதே.

மெய்வாய், கண், மூக்கு, செவிகளாய புலன்களைவென்று, மனதை ஈஸ்வரனிடத்தில் படியச்செய்த உத்தமருள்ள இடத்தை விட்டு, தீர்த்தமென்பது உலகில் வேறு உளதோ? என அதிவீரராமர் கடாவுகிறார்.

கற்றதங்கல்வியும் கடவுள் பூசையும்
நற்றவ மியற்றலும் நவையில் தானமும்
மற்றுள அறங்களும் மனத்தின்பால் அழுக்கு
அற்றவர்க்கே பயன் அளிக்கும் என்பரால்

உரைப்பரும் மானத தீர்த்தம் ஓதிடில்
சுருக்கமின் ஞானநீர் தோய்ந்து அதன்
விருப்பொடு வெறுப்பெனப் பட்டதோர்
கருப்புகுத்திடும் மலம் கழுவும் என்பவே.

அறத்திறம் திறம்பினோர், அருள் இல்லாதவர்,
துறக்கம் ஒன்று இலையென சொல்லும் புன்மையோர்
சிறப்புடைப்பயனுறு தர்க்கம் செய்குநர்,
பெறக்கருந் தீர்த்தநற்பயன் பெறார்களே.

(காசிகாண்டம்)

உம்மையில் பிறவிதோறும் நியமநல் ஒழுக்கம் பூண்டு
பொய்மையில் விரதம் தானம் தவம் செய்து புனிதராகிய
செம்மை நன் நெறியில் நின்ற சித்தருக்கு ஆவதாகித் தீர்த்த
இம்மையில் அடைந்து நித்தம் ஆடுதற்கு எய்தாது அன்றோ.

(திருவிளையாடல்)

என்னும் சிலபாக்கள் அகத்தூய்மையின் அவசியத்தை வலியுறுத்தப்போதுமெனக்கருதுகிறேன். ஆகையால் தான் உண்மையான தீர்த்தமென்பது,

"சத்தியம், தானம், சம்மதம் இன் சொல்
சாற்றுதல், ஒருவழிப்படுதல்,
புத்தியே முதலான கரணமோர் நான்கும்
அடக்குதல், புலன்கள் போம்வழியில்
உய்த்திடாது அமைத்தல், பொறை, திடம், ஞானம்
உயிர்க்கெல்லாம் தண்ணளிபுரிதல்,
இத்திற மனைத்தும் மானத தீர்த்தமென
எடுத்து இயம்பினர் மேலோர்".



இத்தகைய மனமாசை கழுவவல்ல பாட்டு

"புண்ணிய தீர்த்தங்கள் பொருந்தி யாடினோர்
மண்ணிடைப் பறவைகள் விலங்கு மற்றுள
எண்ணரும் யோனிகள் யாவும் எய்திடார்
விண்ணிடைக் கடவுளராகிமேவுவார்"

என்பதே உண்மை. இதனையே 'யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு அரியஉலகம் புகும்' என்றார் வள்ளுவநாவலர்.

மேற்கூறிய உண்மைகளை யறியாமல், பசுவைக்கொன்று செருப்புதானம் செய்வது போல பல குடிகளை நாசமாக்கி, ஈட்டிய பொருளைக்கொண்டு, சில தலங்களுக்குச்சென்று திரும்புதல் தீர்த்த யாத்திரையாகுமா ? தன் பிரார்த்தனை எத்தகைய தீயதாயினும் அதனை நிறைவேற்றவோ அல்லது நிறைவேறியதற்கோ புனிதமூர்த்திகளை தாசராக்கி, லஞ்சம் தருவதுபோல அருச்சனை முதலிய செய்தல் பக்தி வழிபாடாகுமா? 'குளத்தைக் கலக்கி பருந்துக்கு இரையிட்டதுபோல்' ஒன்றுக்கு பத்துவாங்கின வட்டியில் சிலகாசுகளை வீசியெறிதல் தர்மமாகுமா? இவ்விடங்களில் கழுகுகளைப்போல, பசுத்தோல் போர்த்து கொண்டிருக்கும் பாதகரை கொழுக்கச்செய்வது எப்படி தானமாகும்? இதன்வழி பாத்திரமறியாமல் கொட்டும் பணத்தை, சமய உண்மைகளைப் பரப்பவும், அகதிச்சாலை முதலியவற்றின் வழி நமது அனாதை ஹிந்துக்களைப்பாதுகாக்கவும் உபயோகப் படுத்தினால் அது கால தர்மமாகாதா? உண்மை தீர்த்த யாத்திரை இதனினும் வேறெது? அன்பரே! கூர்ந்து யோசியுங்கள். யோசியுங்கள். இதனால் நீங்கள் மாத்திரமன்றி எத்தனை பேரை உண்மை தீர்த்த யாத்திரை செய்வித்த புண்ணியமும் உங்கட்கு கிடைக்கும்?

கேவலம் நீராடினால் மாத்திரம் மோக்ஷம் கிட்டி விடுமென இன்னும் நினைப்பவர்

"அறத்துறை பயிலு மானத தீர்த்த
மாடலாகி நீராடில்,
புறத் தழுக்கு ஒழிவதல்லால் புனிதராகிலர்;
பூந்திரை சுருட்டும்
சிறைப் புனலதனில் முறையுறழ் பகுவாய்
தீவிழிச் செறியெயிற்று இடங்கர்
அரக்குல முதல் அளப்பருங் காலம்
தோய்ந்ததால், துறக்க முற்றனவோ?

(உண்மையான ஞான தீர்த்த மாடாது, ஜலத்தில் குளிப்பதால் உடல் அழுக்கு நீங்குவதே தவிர ஞானியராக முடியாது; அழகிய அலைகளை வீசும் (கங்கை முதலிய) தீர்த்தங்களிலேயே பிறந்து, வளர்ந்து இறந்தாலும் குகையைப் போன்று பிளந்தவாயும், நெருப்புக் கண்ணும், ரம்பப் பற்களுங் கொண்ட முதலை, சுறா முதலிய வெல்லாம் மோக்ஷ மடைந்து விட்டனவோ?)

முதுக்குறைவி லாதவர் மொழியுந் தெய்வ நன்
நதிப் புனலாடினும் நவையின் நீங்கலர்
மதுக்குடம் பின் முறைவரம்பின் மாநதி
புதுப் புன லாடினும் புனித மெய்து மோ?

பெரியோர் அருளிய தெய்வ தீர்த்தங்களாடினும், தீயோர்குற்றத்தினின்றும் விடுதலை யடைவதில்லை; கோடானு கோடி தரம் முழுகினும்கட்குடம் புனிதமாகி விடுமா?

தீர்த்த மகிமை. (காசிகாண்டம்.)

'பொங்காழி சூழுலகில் உள்ளங்கால்
வெள் ளெலும்பாய் போகவோடி
ஐங்காதம் போனாலுந் தன் பாவம்
தன்னுடனே யாகுந் தானே'

தண்டலையார் சதகம்.



ஒளித்தாலும் தூர்க்குணம் போமோ? குரு உபதேச மந்திரம்
அளித்தாலும் புல்லோர் நல்லோர் ஆவரோ? சென்று அடுத்து
களித்து ஆயிரந்தரம் காகம் முழுகிக் கங்கா நதியில்
குளித்தாலும் அன்னம் ஒவ்வாது அச்சுதானந்த கோவிந்தனே!

கோ. சதகம்

கங்கையில் படர்ந்தாலும் பேய்சுரை நல்ல சுரையாகுமா?
காசிக்குப் போனாலும் கர்மந் தொலையுமா?
என்ற சிறு உண்மைகளையேனும் அறிவார்களாக.

கோயில் குளங்களுக்குச் செல்வதெல்லாம் ஞானத்தை அடையும் பொருட்டே என அனுபூதிமானாகிய நன் தாயு மானாரும் சுட்டாமல் சுட்டுவதைக்காண்க. புனிதமக்களே! இனியேனும் புனிதமான தீர்த்த யாத்திரை செய்யீரா?

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறை முறையாய் வணங்கினோர்க்கதே வார்த்தை சொல் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

க. கந்தசாமித் தேவர், உபாத்தியாயர்,
மாகஜனப் பள்ளி, மேட்டுப்பாளையம்.

## விவசாயப் பழமொழிகள்.

1. அறிவிலே விளையுமா, எருவிலே விளையுமா.
2. ஆடே பயிர் ஆரிய மோவள்ளாமை.
3. ஆட்டெரு ஒருபோகத்திற்கும் ஆவின்எரு மூன்றுபோகத்திற்கும்.
4. இயற்கை எருவிலும் செயற்கை எருதிறம்.
5. எருமண மில்லாத பயிரும் நறுமணமில்லாத பயிரும்.
6. ஏரோட்டுவதிலும் எருவிடுதல் நன்று.
7. காய்ந்த எரு காசுக்குதாவது.
8. முன் போகத்திற்கு ஆட்டெருவும் பின் போகத்திற்கு இலை எருவும்.
9. சேரி எரு எல்லாருக்கும் சேகர முண்டாக்கும்.

10. பறைச்சேரி எரு சிரேஷ்டமானது.
11. நிலத்தில் வளர்ந்த பூண்டு நிலத்தில் மடிதல் வேண்டும்.
12. எருவுக்குத்தக்க வெள்ளாமை, கூட்டிற்கு தக்க சமையல்.
13. போதுமான எருவிருந்தால் பைத்தியக்காரனும் பண்ணையாளனாவான்.
14. குப்பை போட்ட நிலமும் கட்டுக் கடங்கின மருமகளும் வீணாகாள்.
15. ஆடு மிதித்தால் போதும், கன்று நின்றால் போதும்.
16. இடையா இடையா தானியமெங்கே, என்றால் ஆட்டுப்புழுக்கையில் அடங்கியிருக்கிறதென்றான்.
17. உழுகிற காலத்தில் ஊர்வழி போனவன் அறுக்கிற காலத்தில் ஆள் தேடிப்பலனில்லை.
18. விரை யொன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா?
19. பரம்படியாத நெல் வெள்ளாமை பாழ்வெள்ளாமை.
20. களை பிடுங்காத பயிர் கால் பயிர்.
21. பட்டமறிந்து விதை.
22. அடர்த்தியை அப்போது பார், கலப்பையைக் கதிரில் பார்.

## வாதவூரடிகள் வரலாறு.

(ஏ. வெங்கடாசல முதலியார்.)

துதி

பெருந்துறையிற்சிவபெருமானருளுதலும் பெருங்
 கருணைப் பெற்றிநோக்கிக்
கரைந்து கரைந்திருகண்ணீர் மழைவாரத்துரிய நிலை
 கடந்து போந்து
திருந்து பெருஞ்சிவபோகக் கொழுந்தேறல் வாய்
 மடுத்துத் தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்திவாதவூரடிகள் அடியிணைகள்
 போற்றி.



திருவளர் பாண்டித் தென்னாட்டிலே, வைகையாற்றின் கரையில் திருவாதவூரென்னுந் திவ்ய நகரத்தில் அமாத்தியரெனும் அந்தணர் குலத்திலே வேதநெறியும் சைவாகமநெறியும் விளங்கவும் பௌத்தமதமானது இருளடைந்தோடவும், சிவபெருமானுடைய திருவருளினாலே பால சூரியன் போலே ஒரு சத்புத்திரர் திருவவதாரஞ் செய்தார். அவருக்குத்திருவாதவூரர் என நாமகரணஞ்செய்து சடங்குகளெல்லாம் வேத விதிப்படி செய்யப்பெற்று இளம்பிறைபோல் வளர்ந்து வேதமுதலிய அறுபத்து நான்கு கலை ஞானங்களையும் பதினாறு வயதினுள் கற்றுவல்லராயினார். இவர்கல்வித்திறமை முதலியவற்றை அரிமர்த்தன பாண்டியன் கேட்டு வரவழைத்து தகுந்த பலவரிசைகளளித்து, மதி மந்திரி உரிமையுங்கொடுத்து மேம்படுத்தினான். திருவாதவூரர் தானார் வேதத்திலும் மனு சாஸ்திரத்திலும் மற்றெல்லாக்கலைகளையும், உறுதியாக முற்றக்கற்றோராதலினால், மற்றைமந்திரிகளெல்லாரினுஞ் சிறந்து முதன் மந்திரியாகி அந்தப்பாண்டியனுக்குக் கண்ணுங்கவசமும் போலக் காரியஞ்செய்து, உயிர்கள் களிக்கவெண்கொற்றக் குடைநீழலில் உலகத்தைக் காத்து நீதிசெலுத்தி வாழ்ந்திருந்தார். இப்படியிருக்கு நாளில் நித்தியா நித்திய வஸ்துவின் சொரூபலக்ஷணம் உள்ளபடி பகுத்தறியும் விவேகம் தோன்றி, நிலையில்லாத இம்மை மறுமை யின்பங்களின் உவர்ப்பு வரப்பெற்று, தூய்மையாகிய மனத்தையுடையவராய் வீட்டையும் மார்க்கத்தையே ஆராய்வாராயினார். "புத்தமுதலாகிய புறச்சமயநூல்களும், நிதமாகிய அகச்சமயநூல்களும், மனத்திலுள்ள மாசையறுத்து அரனருளை அருளியா; அதனால் மித்தையாகிய ஆணவக்கட்டு அறாது; ஆகவே வீடடைதல் இல்லையாம். பத்திசெய்து அரனருளைப்பெற்ற அடியவர்க்கன்றி ஏனையோர்க்கு முத்தி அரிது என்று வேதம் கூறும். அவ்வேதத்தின் மெய்ப்பொருளை யெல்லாம் சத்திநிபாதமடைந்த, பரிபக்குவர்க்குச் சிவாகமம் உய்த்துணர்த்தும் என்று மெய்யுணர்ந்தோர் கூறுவர். வேதமுடிவினும் ஆகமத்தின் முடிவினும் எய்தும் பொருள்கட்குத்தம்முள் வேறுபாடு இல்லை. வேறுபாடுள்ளனவாய்க்

காட்டுகின்ற மாறுபாட்டினையொழித்து, அஞ்ஞானமாகிய மலத்தைப் போக்கி பதியாகிய தன்னையும் பசுவாகிய என்னையும் அறிவிக்கின்ற ஞானாசாரியன் வருவது எக்காலம்? மெய்யன்பினுக்கு எளிவரும் கருணையினுடைய குருபரன் அருளாலன்றி, இந்தக் கொடிய பாசத்தை கல்வியினாலே போக்கக்கருதுவது கையினாலே கடலைக் கடக்கக்கருதுதல் போலாம்" என்று வாதவூரடிகள் இன்பவீட்டைச் சேரவேண்டிய பேராசையாற்றொடக்குண்டு, வேதாகமசாஸ்திரங்களிலே வல்ல பெரியோர்கள் திருக்கோயிலுக்கு வருந்தோறும், தாம் அவரிடத்துச் சென்று காணுந்தோறும், அவர்களோடு மிகவும் அளவளாவி மெய்ப் பொருளை ஆராய்ந்தார். இப்படி ஆராய்ந்தும் ஞானாசாரியரகப்படாமையால், உவர் நீருண்டாற்போல மனத்துக்குப் பொருந்தாமல், அகத்தமைவுறாது, சிவபெருமானிடத்திலே உள்ளன்புகொண்டு, அரசனுடைய அமைச்சுரிமைத் தொழிலையும் கைவிடாமல் கைக்கொண்டொழுகினார். இப்படியொழுகும் ஒருநாள் அரசனுடைய சபைக்குப்போய் நிற்கும்போது, குதிரைப்பந்தி காப்பவர் அரசன்முன் சென்று வணங்கி ஒருபுறத்தே நின்று "மகாராஜாவே! நமது குதிரைக்கூட்டங்களில் இறந்தன போக மிஞ்சின குதிரைகள் நோயுடையனவும், மூப்புடையனவுமாயின. நல்ல குதிரைகள் ஒன்றாவது இல்லையென்றார்கள். அது கேட்ட அரிமர்த்தன பாண்டியன் திருவாதவூரரைநோக்கி, இற்றைத்தினமே நீர் நமது பண்டாரத்தைத்திறந்து வேண்டியபொருளை எடுத்துக்கொண்டு சென்று, கடற்கரையிலே குதிரைகள் வந்திறங்குவன தெரிந்து விலைக்கு வாங்கிக் கொண்டு வருதிர்" என்று சொல்லி விடுத்தான். மனவேறுபாட்டுடன் மந்திரித்தனம் பூண்டொழுகுந் திருவாதவூரர் பண்டாரத்தைத்திறந்து நல்ல குதிரைகளாக வாங்கத்தக்க, வேண்டிய திரவியங்களையெடுத்துக் கொண்டு தாழிட்டிறுக்கி, சந்திரகுலத்தரசனாகிய பாண்டியனிடத்தில் விடைபெற்றுப்புறப்பட்டு, தாம்கொண்ட பொற்சுமைகளை ஒட்டகங்களிலேற்றுவித்து, முன்னே போகவிட்டுப், பின்பு பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ் செய்து, சித்தி விநாயக



ரையும் மீனாக்ஷியம்மையாரையும் வணங்கி, பின்பு சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளை வணங்கி, "எம் பெருமானே! அடியேன் கொண்டு செல்லுகின்ற திரவியங்களெல்லாவற்றையும் தேவரீருக்கும் தேவரீருடைய அடியார்களுக்கும் உரியனவாகச்செய்தல் வேண்டும். இதுவே அடியேனுக்குள்ள குறையென வேண்டுதல் செய்தார். அப்பொழுது சோமசுந்தரக் கடவுள் இன்னருள் போல அர்ச்சகராகிய ஆதிசைவரொருவர் எதிரே வந்து நீறு கொடுக்கப்பெற்று, திருவாதவூரர் நமக்கிது போலும் நன்னிமித்தமில்லை. இது நன்னெறிக்கேதுவே என்று இருகரங்களிலும் வாங்கித்தரித்து, வேதநாதனை சோமசுந்தரக்கடவுளிடத்தே விடை பெற்றுக்கொண்டு கிளம்பி. வாத்தியங்கள் முழங்கவும், சாமரங்கள் இரட்டவும், வெள்ளைக்குடை நிழலின் கீழே இரத்தினச்சிவிகை மேற்கொண்டு, பதாதிகள் சூழச்சென்றார்.

வெள்ளியம்பலத்திலே காண்மாறியாடின கடவுள் திருவாதவூரருடைய இருவினையொப்பையும், மலபரிபாகத்தையும், பார்த்து, மார்ச்சார சம்பந்தமாக இவரை வலிய வந்தாண்டு கொண்டருளத் திருவுளங் கொண்டு, கருணையால் ஒரு ஆசாரியராகி, தமது திருப்பாதங்களை விட்டு நீங்காத பல மாணாக்கர் கூட்டஞ்சூழ திருப்பெருந்துறையில் ஒரு குருந்த மர நிழலில் வீற்றிருந்தருளினார். எழு பிறப்பாகிய கருங்கடலைக் கடக்க வருகிற திருவாதவூரர், சேனைகளோடு அடவி முதலியவற்றைக் கடந்து சென்று, பெருங்கருணைக்கடலாகிய ஞானாசாரியர் வீற்றிருக்குந் திருப்பெருந்துறையை அடுத்து, வர வர, மனத்திலே ஆனந்தக்கடல் பெருகி கரங்களை சிரமேற் குவித்துக் கொண்டு, கண்களினின்று ஆனந்த பாஷ்பம் சொரியவும், உள்ளத்திலே கடவுளருள் விளையவும் நடக்கிற திருவாதவூரரைக் கண்டோர், "இவர் உன்மத்தர்" என்று நகைக்கும் படியாகிய அதிதீவிர பக்குவமாகிய நான்காம் சத்திநிபாதம் உண்டாக, மிகவும் அஞ்சி, பெருஞ்சுமைதாங்கினோனையும் பிணிப்புண்டோனையும் போன்று, "அழலிடைப்பட்ட வெண்ணெய்போல தமது மனமுருகக்கண்டு மனமுருக்குதலாலே மலத்தைச் சேதிக்கும் கிருபைக்கடலாகிய ஞானாசாரியர்

எழுந்தருளியிருக்குமிடம், இதுவே யென்று திருப்பெருந்துறைக்கு வந்து, திருக்கோயிலை யடைந்து அங்குள்ள தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி, சந்நிதி முன்னே வந்து, மழுவை வலங் கொண்ட கடவுளை நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்து, திருக்கோயிலை வலம் வந்தார். மூல மறையும் ஓதி முடியாத பொருளைச் சில முனிவர் தெளிய மோன வழியைத் தெளிவிக்குங்கோலமானது, ஞானசார்யர் எழுந்தருளியிருக்கிற குருந்த மரத்தை யெதிரே கண்டார். அங்கே பலசமய சாத்திரங்கள் ஒவ்வொரு மருங்கிலே கோஷிக்க, சரியையாதி நான்கு பாதங்களும் வல்ல அடியார்க் குழாங்களுக்கிடையே சிவஞானபோத புத்தகந் திருககரத்திலேந்தி யோகவாசனத்தின் மீது எழுந்தருளியிருக்கின்ற பெருங்கருணைக் கடலாகிய ஞானசாரியரைத்தெரிசித்து,

"மன்றுளாடிய ஆனந்த வடிவமும் வடவால்
ஒன்றி நால்வருக்கு அசைவற வுணர்த்திய உருவும்
இன்று நாயினேற்கு எளி வந்த இவ்வுரு வென்னு
அன்று நாயகன் குறிப்பு உளத்துணர்த்திட வறிந்தார்"

"முன் பணிந்தினர் அனந்தரைஞ்சலி முடி மேல்
என்பு நெக்கிடவுருகினர் இனியார் வெளி வந்து
அன்பெனும் வலைப்பட்ட வரருள் வலைப்பட்டார்,
துன்பவெம்பவ வலையறுத்திட வந்த தொண்டர்".

அம்பலத்திலாடிய ஆனந்த வடிவமும், கல்லால நிழலிலே சனகர் முதலிய நான்கு முனிவர்களுக்கு அசை வறச்சொன்ன ஞானோபதேசத்தின் வடிவமும், இன்றைக்கு நாயினேனுக்கு எளி வந்த இந்த வடிவமே யென்று, கடவுள் திருக்குறிப்புணர்த்த உணர்ந்து வணங்கி கைகளை முடியின் மேலேறக்குவித்து, என்பு நெக்குருக மன முருகி ஞான தேசிகருடைய அருள் வலைக்குள்ளகப்பட்டார். ஞானதேசிகரானவர், செங்கழு நீர் மாலையையும் சந்தனக்குழம்பையும் அணிந்து, காலமுங்காணுக் காட்சியு நிமித்த முங்கடிக் தவராய்நிற்க திருவாதவூருடைய ஒழுக்கத்தையும் அன்பையுங் கண்டு உடல்



பொருளாவி மூன்றையும் நீரோடு அவர் தத்தஞ்செய்ய ஏற்று ஞானக் கண்ணினாலே மும்மலங்களையும் போக்கி, திருவடித்தாமரையைச் சூட்டி, திருக்கரத்தைச் சிரமேல் சூட்டி, சூக்கும பஞ்சாக்ஷரத்தை உபதேசித்து, பாசக்கட்டை யறுத்து அவரை சிவ சொரூபராக்கினார்.

வாதவூரடிகள் அருட்டிரு நோக்கினாலே இரும்புண்ட நீர் போல மலத்தைக்கெடுத்து, சொருபதேசத்தையும் தம்மை மூடியிருந்த பாசத்தையும், தம்மையும் மறந்து மெய் ஞான சொரூபமாய் ஒன்று மறிந்திலாத, அவருடைய நாவில் நீங்காத ஞானவாக்குக்கலைமகள் வந்து தங்கினாள். அப்பொழுது அவர் உள்ளத்திலே நிறைந்த பேரின்ப வெள்ளந்தேங்கிப் புறத்தே வழிதல் போல, கைகள் அஞ்சலிக்க, சிரம் கம்பிக்க, கண்களில் ஆனந்த பாஷ்பஞ்சொரிய, திருமேனி உரோமாஞ்சங்கொண்டு அழலிடைப்பட்ட நெய்போலுருக நாத்தழுதழுத்த அன்பினராய் ஞானதேசிகராகிய கடவுளை வணங்கினார்.

"ஐயனே யெனையாண்டருள் புரியு மாதியே யுழையணிமழுவிருக்குங் கையனே கொடுங்காலனை முனியுங் காலனே. இருகண்ணினுண்மணியே, செய்யனே யடி போற்றியென் பெரிய செல்வமே யடி போற்றி, பொய்யினர்தம் பொய்யனேயடி போற்றி. எவ்வுயிர்க்கும் போதமே யடி போற்றித்தோத்திரஞ் செய்வாராயினர்.

"பழுதிலாத சொன்மணியினைப் பத்தி செய்து அன்பு
முழுதுமாகிய வடத்தினால் முறை தொடுத்தலங்க
அழுதுசாத்து மெய்யன்பருக்கு அகமகிழ்ந்தையர்
வழுவிலாதபேர் மாணிக்கவாசகன் என்றார்."

பழுதில்லாத சொற்களாகிய மணிகளை அன்பாகிய வடத்தாற் கோத்த பாமாலையை அழுது சாத்துகின்ற மெய்யன்பராகிய வாதவூரடிகளுக்கு "மாணிக்க வாசகன்" என திரு நாமத்தை ஞானதேசிகராகிய கடவுள் கொடுத்தருளினார்.

"பாட்டிற்கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீர்
ஆட்டிச்சொன்மலர் அணிந்து தற்போத வின்னமுதை

ஊட்டித்தற்பர ஞானமாம் ஓமவெங்கனலை
மூட்டிச்சம்புவின் பூசைமேல் முயர்ச்சி யாரானார் ”
“ ஆசைவெம்பவ வாசனையுற்ற மாணிக்க
வாசகப்பிரான் தேசிகன் மாணவ ரோது
ஓசையாகமவுபனிடப் பொருளெல்லாங் கேட்டு
நேசமங்கு வைத்திருந்தனனது கண்டிருந்தன் ”

வாதவூரடிகள் பாமாலைக்கு மனமகிழ்ந்தருளின குருபரன் திருவடிகளின்மேலே, ஆனந்தக் கண்ணீராட்டி பாவாகிய மலர்களைத் தாங்கி, தற்போதமாகிய அமுதை ஊட்டி, சிவஞானமாகிய ஓமாக்கினியை மூட்டி ஞானபூசை செய்வாராயினார். மாணிக்க வாசகரான வாதவூரடிகள் பிறவி வாசனை தீர்ந்து ஞானாசாரியரது மாணாக்கர்கள் அவ்விடத்தோதுகின்ற வேதாகமமான உபநிடதப் பொருள்களையும் கேட்டு அதில் ஆவலுடையவரா யிருந்தார். அதனைச் சிவபெருமான் பார்த்தருளி வாதவூரடிகள் தித்திக்கப்பாடுகின்ற மாணிக்க வாசகங்களை இன்னும் சின்னாட்டிருச் செவிமடுக்க பேரன்பளித்து அவர் கொடுவந்த பொருள்களெல்லாவற்றையும் பெரிய அன்பைக்கொண்டு வாங்கி வேண்டும் பணிகள் செய்வித்துப் பாண்டியனுக்கு இவருடைய பெருந்தகைமைகளைத் தெரிவித்த வீடடை விக்கவும் புத்தரை வாதிலே வெல்விக்கவும் திருவுளங் கொண்டார்.

(தொடரும்.)

## நம் நாட்டின் நிலை

நம் நாட்டிலே கைத்தொழிலினால் பிழைப்போர் 15 லக்ஷம்பேர். நெசவுத்தொழிலால் பிழைப்போர் 20 லக்ஷம்பேர். விவசாயத்தினால் பிழைப்போர் 2290 லக்ஷம்பேர். அமெரிக்காவிலே ஒவ்வொருவரின் சராசரி தினசரி வருமானம் ரூ 3. ஆஸ்த்திரேலியாவில் 2-4-0. இங்கிலாந்தில் ரூ 2-0-0. இந்தியாவில் 0-1-7. மற்றும் கீழ்கண்ட தேசங்களில் 1000 ஜனங்கட்கு எவ்வளவு பணம் செலவழிக்கப் படுகிறதென்றவிவரம்.



| | |
|---|---|
| இந்தியா 33—10—8. | பிரான்ஸ் 948—0—0 |
| ஜப்பான் 216—15—0. | அமெரிக்கா ஐக்கியமாகாணம் 1681—0—0 |

கடந்த 1927—28ம் வருஷத்தில் இந்தியாவில் மொத்தம் 10லக்ஷம் சதுர கஜம் கதர் உற்பத்தியாயிருக்கிறது. இதன்பெருமான் 24லக்ஷம் ரூபாய். மாகாணம் வாரியாகக் கதர் உற்பத்தி விவரம் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| தமிழ்நாடு | 9,97,466 | கர்நாடகம் | 73,970 |
| வங்காளம் | 3,28,609 | உத்கலம் | 53,384 |
| ஆந்திரம் | 2,94,083 | மகராஷ்டிரம் | 37,036 |
| பீஹார் | 2,12,441 | குஜராத் | 36,542 |
| இராஜ்தானம் | 1,41,710 | காஷ்மீர் | 22,219 |
| ஐக்கியமாகாணம் | 1,16,365 | தில்லி. | 15,758 |
| பஞ்சாப் | 84,692 | | |

நம் தேசம் முன் காலத்தில் செல்வத்திலும் நாகரீகத்திலும் சாஸ்திர ஆராய்ச்சியிலும் நிகரற்றதாயிருந்த விஷயத்தைச் சரித்திர ஆராய்ச்சி யாளர்கள் தெளிவாய் எழுதியிருக்கிறார்கள். ஆனால் தற்சமயம் நம் நாடு கல்வி அபிவிருத்தியில் இருக்கும் நிலையை 1928–29ம் வருடத்திய கல்கத்தா காங்கிரஸ் வெளியீட்டைக்கவனிக்கின் மிகவும் பரிதாப கரமாக இருக்கிறது.

கல்வி பயின்றவர்கள் 100க்கு முறையே

| இங்கிலாந்து | அமெரிக்கா | ஜப்பான் | இந்தியா |
|---|---|---|---|
| 93.5 | 95.4 | 97.8 | 5.2 |

நம் நாட்டைக் கவனிக்கின் 100க்கு 5.2 பேர்களே படித்திருக்கிறார்களென்றால் என்னே நம் நிலைமை! பிற்கால வாழ்கைக்கு இன்றியமையாத கல்வியை 100க்கு5.2 பேர்கள் படித்தும் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிக மென்றால் 100க்கு 90 பேர் படிக்க ஆரம்பித்து விட்டால் நிலைமை அதிகமோசமாய் விடும். பிறநாட்டைப் போல் நமது நாட்டிலும் தொழிற்கல்வி கல்லூரிகள் ஏற்படாதவரையில் நாம் தற்காலக்கல்வியில் மோகங்கொள்ளாதிருப்பதே நலம்..

# திருவல்லிக்கேணி கள்ளுக்கடை.

(விமோசனம் எழுதுவது)

மது, அதிகாரிகளின் மதியையும் குழப்பி விடுவதாய்க் காணப் படுகிறது. சென்னை அரசாங்கத்தின் கலால் இலாகா மந்திரி ஒரு கொள்கையை வெளியிடுகிறார். கலால் இலாகா கமிஷனர் அதற்கு விரோதமாய்க் காரியம் செய்கிறார். பிறகு இரண்டுபேரும் சேர்ந்து அக்காரியம் சரியென்று வாதமிடுகிறார்கள்!

சென்னைச் சட்ட சபையில் சமீபத்தில் ஒரு விவாதம் நடந்தது. திருவல்லிக்கேணியில் கருப்பண்ணி அம்மன் கோவில் இரண்டாவது சந்தில் முந்தி ஒரு கள்ளுக்கடை இருந்தது. அதை 1928-ம் வருஷத்தில் மூடினார்கள். மூடியகடையை மறுபடியும் இந்த வருஷத்தில் திறந்திருக்கிறார்கள். இதைக் கண்டிப்பதற்காகச் சட்டசபையில் அவசரப் பிரேரபணை ஒன்று கொண்டுவரப்பட்டது. அந்தப் பக்கத்து ஜனங்களெல்லாம் அவ்விடத்தில் கள்ளுக்கடை வேண்டாம் என்கிறார்களென்றும், புதிதாக மதுவிலக்குப் பிரசாரம் செய்ய ஆரம்பித்திருக்கும் அரசாங்கத்தின் கொள்கைக்கு மூடிய கடையைத் திறப்பது விரோதமான காரியமென்றும் சொல்லப் பட்டன. கண்டனத் தீர்மானம் நிறைவேறியது.

ஐரோப்பியர்களும், உத்தியோகஸ்தர்களும், மந்திரிகளும், அரசாங்கநியமனம் பெற்ற அங்கத்தினர் சிலரும் தீர்மானத்துக்கு விரோதமாய் வாக்களித்தார்கள். விவாதத்தின் போது கலால் கமிஷனர் மிஸ்டர் காடரெல் என்பவரும், கலால் மந்திரி ஸ்ரீமான் முத்தையா முதலியாரும் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார்கள்.

கலால் கமிஷனர் கலால் இலாகா நிர்வாகத்தை நடத்துபவர். இவர் பேசியதைக் கவனித்தால், இவருடைய அபிப்பிராயத்துக்கும் கலால் மந்திரியின் மதுவிலக்குப் பேச்சுக்கும் வெகுதூர மென்று தெரியவரும்.

கலால் மந்திரி கள்ளு, சாராயக் கடைகளை மூடிவிடுவதற்குத் தடையாயிருப்பது பணம் ஒன்றுதான் என்றுசொல்லுகிறார். குடி



தீமை தான் என்பதை ஒப்புக்கொண்டு, நாலு லட்சம் ரூபாய் செலவழித்து மதுவிலக்குப் பிரசாரம் செய்கிறேன் என்கிறார்.

ஆனால் கலால் கமிஷனர் மிஸ்டர் காடரெல் மேற்படி விவாதத்தின்போது சொன்னதைக் கேளுங்கள் :—

"இந்தக் கடைக்கு அக்கம்பக்கத்திலுள்ள ஜனங்களுக்குக் குடி அவசியமானது. மீன் பிடிக்கக் கட்டுமர மேறிச்சென்று கடுமையான வேலை செய்து வந்தபிறகு களைப்பைப் போக்கிக்கொள்ளக் கள்ளாவது, வேறு குடியாவது, அவர்களுக்கு வேண்டும். சோடா குடித்து அவர்கள் தாகம் தணியாது. இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் கட்டுமரத்தில் வேலை செய்திருந்தால், ஒரு புட்டி பிராந்து எவ்வளவு அவசியமென்பதைத் தெரிந்து கொண்டிருப்பார்."

"சென்ற வருஷம் பத்து கடைகளை மூடிய பிறகு கலால் கமிஷனருடைய (அதாவது என்னுடைய) வாழ்க்கை பெரிய தொல்லையாகி விட்டது. கிராமணிகளும், மற்ற குத்தகைக்காரர்களும், மறுபடி அக்கடைகளைத் திறக்கவேண்டுமென்று மனுவின் மேல் மனுவாய்ப் போட்டுப் பிராணனை வாங்கிவிட்டார்கள். ஆகையால் இந்தக் கடை மீண்டும் திறக்கப் படுமென்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப் பட்டது."

ஆகவே, மூடிய கடையை மீண்டும் திறந்ததற்கு முதலாவது காரணம் கிராமணிகள் (அதாவது குத்தகைக்காரர்கள்) கேட்டுக் கொண்டது! இரண்டாவது காரணம், செம்படவர்களுக்குக் கள்ளு வேண்டுமென்று மிஸ்டர் காடரெல் அபிப்பிராயப்படுவது!

மதுவிலக்குப் பிரசாரம் செய்யும் மந்திரி இந்தக் காரணங்களை மறுத்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அவரும் தீர்மானத்தை எதிர்த்தார்!

உழைப்பாளிகளுக்குக் கள்ளுவேண்டுமென்று மிஸ்டர்காடரெல் சொல்லியது முற்றுந்தவறான கொள்கை யென்பது எத்தனையோ முறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் கள்ளும் சாராயமும்

தேகபலத்தைக் குறைத்து விடுகின்றனவென்றும், ஏழைத் தொழிலாளிகளின் வாழ்க்கைக்கு இவையே பெரும்பகை யென்றும் யாருக்குத் தான் தெரியாது? இதைப்பற்றி வேறோரிடத்தில் விரிவாக எழுதியிருக்கிறோம்.

ஆயினும் அதிகாரிகள் திரும்பத் திரும்ப இந்தப்பழம் பாடத்தையே படித்து வருகிறார்கள். உண்மையாய்த் தூங்குவோரை எழுப்பலாம்; பொய்த்தூக்கம் தூங்குபவர்களை எழுப்ப முடியுமா?

மிஸ்டர் காடரெல் போன்றவர்கள் ஏழை உழைப்பாளிகளிடம் அபார கருணை கொண்டவர்கள் போல் நடிப்பதுதான் எல்லாவற்றிலும் துயரமான விஷயம். மாதம் ஆயிரம், இரண்டாயிரம் சம்பளம் வாங்குவோர் பீர் அல்லது சாராயத்துக்காக 50, 60 செலவழித்தால் அது அவர்களுக்குப் பெரிய காரியமாய்த் தோன்றாமலிருக்கலாம். ஆனால் ஏழைத் தொழிலாளிகளோ நாள் முழுதும் வேலை செய்து சம்பாதிக்கும் சொற்ப கூலியில் பெரும் பகுதியைக் குடியில் தொலைக்கிறார்கள். கூலிப்பணம் முழுவதையும கள்ளுக்கடையில் கொடுத்து விட்டு, வீட்டுக்கு வெறுங்கையுடன் திரும்புவோரும் உண்டு. இப்படிப்பட்ட ஏழைஉழைப்பாளிகளிடம் வருஷம் ஐந்து கோடி ரூபாய் வசூலித்து அரசாங்கம் நடத்துவோர், அவர்களுடைய நன்மையைப்பற்றிப் பேசுவது விந்தையல்லவா ?

மூடிய கடைகளை ஒரு புறம் திறந்து கொண்டே வந்தால் பொதுப் பணத்தைச் செலவழித்து மற்றொரு புறம் நோகாமல் அடிக்கும் மதுவிலக்குப் பிரசாரம் செய்வதில் என்ன பயன்? ஜனங்கள் சிரிக்க மாட்டார்களா?

## நச்சுப் பொய்கை.

### I

### கஞ்ஜா.

(டாக்டர் D. ஸ்ரீநிவாசன் A. B., A. M. A. C.)

புகையிலையினாற் போதிய போதையை யடையாதாரும், மிகு வெறியை விரும்பு வாரும், சாமியார் ? என வெளிக் கிளம்புவாரு



இயற்கையாய்ச் சான்புருவ திக்கஞ்ஜா விடத்திற்றான். இது, பொதுவாக தோட்டங்களிற் பயிரிடும் புளிவஞ்சிச் செடியை தோற்றத்தில் முழுதும் ஒப்பது. நாருக்காக பயிரிடுஞ் சணற்செடியின் இனத்தைச் சார்ந்ததென பலர் கருதுவதுடன், இதற்கு 'இண்டியன் ஹெம்ப்' (Indian hemp) என ஆங்கிலத்தும், கெனபிஸ் இன்டிகா (Connabis Indica) லத்தீன் பாஷையிலும் பெயருண் டென்ப. இச்செடி சமூலமாக உபயோகப்படுவதாயினும் தனிப்பட அதன் இலை, மலர், பிசின் முதலியவையே சிறந்ததெனக் கருதப்படுகிறது.

### கஞ்ஜாவின் தொன்மை.

கஞ்ஜாவின் தொன்மை :—தண்டும் கமண்டலமும் தனிக் காவியுடையும் ஜடை முடியும் எவ்வாறு தள்ளரியதென கருதப்படுகிறதோ அவ்வாறே இன்று கஞ்சா சிமிலும் துறவிகளின் அணியெனத் திகழ்கிறது. இன்றிருந்த விடம் நாளையிராமல் திரியும் வைராகிகளும், மும்மலத் தொடக் கறுத்து முதல்வனை நாடி, உண்மையின் அகத்துறவு கொண்ட பெரியாரிற் சிலரும், அவற்றின் ஒருமையை விரும்பாது புறத்துறவு புனைந்து பொய் வேடங் காட்டித் திரியும் அற்பரிற் பலரும் அவ்வேடத்திற்குறிய தென இக்கஞ்ஜா விடத்திற் காட்டும் பக்தியே ஒருவாறு இதன் தொன்மையை சுட்டுவது ஆம்.

கிரேக்க தேசத்துள் மிக பழம் பெரும் கவிஞராகிய ஹோமர் என்பவர் தமது காவியத்தின் கதாநாயகர்களில் ஒருவனாகிய 'டெலிமேகஸ்' என்பான் அல்லலுற்று 'மெனிலாஸ்' என்ற அன்பனின் இல்லமடைந்த போது ஆண்டிருந்த ஹெலன் என்னும் மெல்லியாள் தந்த நோயோட்டும் பூண்டொன்றினால் தன் துயரெல்லாம் மறந்தான். இம்மூலிகை எகிப்திய மாதொருவளிட மிருந்து ஹெலன் பெற்றாள்' எனப் பொறித்த குறிப்பினாலும், ஆண்களுக் குறும் சினம் அல்லது சோர்வினை எளிதில் நீக்குவதில் எகிப்திய மாதர் இணையற்றவராதலாலும் அன்னாரின் அதிரகசிய மர்மத்தை ஹோமர் குறிப்பிட்டிருத்தலால் அவர் தம்மிடை நெடுங்காலம் வசித்திருக்

கவேண்டுமெனவும், எகிப்தியர் உரிமை பாராட்டுவதாக 'டியோடாரஸ்' கூறுகிறார். அவ்வெகிப்திய மாதர்களின் அதி ரகசிய மூலிகையும் இக்கஞ்ஜாவே என கருதப்படுவதால், மிகப் பழங்காலந் தொட்டே, இது கிரீஸ், எகிப்து தேசங்களில் இருந்ததாக தெளியக் கிடக்கிறது. அராபிக் கதைகளின் தலைவர்களாய ஹருனல் ரஸ்சித் முதலியோரும் இதனை 'பங்' கெனும் பெயரால் கையாண்டு வந்திருப்பதாக அதன் மொழி பெயர்ப்பு ஆசிரியரான லேன் (Lane) கூறிவதை நோக்கின், அது வெகு காலத்திற்கு முன்னரே அரேபியா, ஆசியாமைனர் பிற தேசங்களினு மிருந்த தெனப் புலனாகிறது.

கிறிஸ்து மதத்தினருக்கும் ஏனையோர்க்கும் நேர்ந்த மதயுத்தங்களின் (Crusades) போதும் பகைவர் இச்செடியினலாய "ஹஸ்கஷிஸ்" என்பதை உட்கொண்டு மரணமென்பதையும் மறந்த வெறியர்களாய் ஆவேச பூதங்களென கிறிஸ்துவ சேனைகளிடை திடீரெனப் புகுந்து பெருங் கொடுமைகளை விளைவித்தன ரென்றும், அதனைப் பற்றியே மிருகத் தனமாக திடீரெனத் தாக்குதலென பொருள் தரும் (Assassin) அசாசின் எனும் புதுப்பதமும் ஆங்கிலத்தில் புகுந்த தெனவும் பாஷாவிற்பன்னரான (Sylvester de sacy) சாசி கூறுவதால் இக்கஞ்சா கிழக்கு ஐரோப்பாவிலும் இருந்திருக்க வேண்டுமென ஊகிக்க கிடக்கின்றது. பாரசீகம் துருக்கியாதிய விடங்களில் பரந்திருப்பதோடு இதனை வட ஆப்பிரிக்காவின் ஆதிகுடிகளான "மூர்" ஜாதியினரும், சிறந்த மருந்தும், இன்ப விளைவினுக் கின்றியமையா அமிர்த மென மத்திய தென் பாகத்தினரும், தென் கோடியினர் (Dutcha) டச்சா வெனும் பெயராலும் இதனையருந்தி வெறி கொள்ளுகின்றனர் என்பதால் இது ஆப்பிரிக்காவில் நிறைந்துளது.

"ஐரோப்பாவின் ஆதிமக்களான சித்தியன்ஸ் (Scythians) என்பரும் இதன் ஆவியை யுட்கொண்டு மதங்கொண்டனர்" என ஹிரோடோடாஸ் (Herodotus) குறிப்பிடுகிறார். தென் அமெரிக்கா ப்ரேசில் (Brazil) இந்தியர்களிடமும் இதன் உபயோகமுண்டு.



எனக்கூறும் கூற்றுகளை நோக்குழி, போக்கு, வரவிற்குறிய சாதனங்களின்றி உலகம் துண்டுபட்டுக் கிடந்ததென நாம் கருதும் அக்காலத்திலுங் கூட ஏதோ ஓர் வகையில் இக்கஞ்ஜா உலகெங்கும் பரவியிருந்த தென்பது பேராச்சரியத்தைத் தருகிறது.

உபயோகிக்கப்படும் முறை.

தொன்று தொட்டு உலகெங்கும் விரிந்து பரந்துள்ள இக்கஞ்ஜா, பலரால் பலவேறு முறைகளில் கையாளப்படுகிறது.

கஞ்ஜா.

கஞ்ஜா :—மலர் கொள்ளுங் காலத்து அதனிடந்தோன்றும் பிசினை நீக்காது, இச்செடியை சமூலமாகப் பிடுங்கி உலர்த்திக்கொள்ளுதற்கு கஞ்சா வெனப் பெயராம்.

பங்கி.

பங்கி Bhang :—இச்செடியின் கடினமான தண்டினை நீக்கி, பெரிய இலைகளையும், வித்துக்கள் நிறைந்துள்ள சடையினையுங் கொள்ளின் அது 'பங்', சப்ஜி, அல்லது சித்தி யெனப்பெறும் இவை இரண்டும் பொதுவாக இந்தியாவிலும், பிற நாடுகளிலும், சிமினில் வைத்து புகைத்து, அதன் புகையை உட்கொள்ளுவதற்கும், ஏனைய வஸ்துக்களுடன் கூட்டி பானமாக உபயோகிப்பதற்கும் ஆம்.

சரஸ்.

சரஸ் Churrus :—கஞ்ஜா செடியானது மலருங்காலத்து இயற்கையாக அதனிடத்து சுவர்ந்து உறையும் பிசினை எடுத்து பத்திரமாக வைத்துக் கொள்ளுவதற்கு சரஸ் அல்லது மொம்மீயா (Momeea) வெனப் பெயர். இதனை சிறு மாத்திரைகளாக்கி அப்படியே விழுங்கி விடும் வழக்கம் "ஐக்கிய மாகாணங்கள், கிழக்கு வங்காளம், பீகார், கல்கத்தா, பம்பாய் மாகாணங்களில் இருப்பினும், சிறப்பாக மத்திய மாகாணங்களிலும் பஞ்சாப்பிலும், இதன் உபயோகம் நிறைந்திருக்கிறது.'

—L. G. மூக்கர்ஜீ.

"கஞ்ஜா செடியில் உன்னதமானதும், மிகுந்த விலையுள்ளதுமான பொருள் இச்சரஸ் என்னும் அதன் பிசின் தான். இது

காபூல், நேபாளம், பாரசீக மாதிய தோங்களிலும் கையாளப்பட்டு வருகிறது. ஹீரட் பகுதியிலிருந்து வரும் சரஸ் தான் மிகவும் உயர்ந்த தென பாராட்டப்படுகிறது."

—ஜான்சன்.

என இம்முத்திரத்தால் பெரிதும் உபயோகிக்கப்படுவதுடன், பலவேறு தேசத்தார் இதனை பலவேறு பெயர்களால் கொள்ளுகின்றனர். உலர்த்தின தனி மலருக்கு மொராக்கோ நாட்டில் (Kief) கீப் எனப் பெயராம்.

பொதுவாக சிரியா (Syria) மாகாணத்திலும் துருக்கியில் சில பகுதிகளிலும் பூர்வீக குடிகளான சரசீன்ஸ்(Saracens) ஜாதியினரும், தற்கால அரபியரும், இதனைச் சாதாரணமாக ஹஸ்சிஸ் (Haschisch) என்ற பெயரால் உபயோகிக்கின்றனர். இச்செடியின் சமூலத்தைநன்றாக இடித்து ஜலத்திலிட்டு காய்ச்சி, அதனுடன் ஓரளவு வெண்ணெயை யிட்டு, குழம்பாகச் சுண்டும் பக்குவத்திலெடுத்து துணியில் வடி கட்டுகின்றனர். துணியின் மேற்புறத்தில் கஞ்சா சத்து நிறைந்ததால் பசிய நிறங்கொண்டு தங்கும் வெண்ணெயை எடுத்து பக்குவப் படுத்திக் கொள்ள அது 'ஹஸ்சீஸ்' எனப் பெயர் பெறும். வெறுப்புதரும் இதன் சுவையை மாற்ற அதனுடன் கற்பூரம், ஜாதிக்காய் முதலிய வாசனை பொருட்களையுஞ் சேர்த்து ஓர் வகை லேகியமாக்கி உபயோகிப்பார்களாம்.

மூர்ஸ் ஜாதியினர் உபயோகிக்கும் முறைக்கு எல் மோகன் (El Mogen) என்றும், அரபியரின் முறைக்கு தவாம்சி (Dawamese) என்றும், துருக்கியரின் பக்குவத்திற்கு மட்ஜோ அன் (Modjoun) என்றும் பெயர் உண்டாம். "துருக்கியின் தலைநகரான கான்ஸ்டாண்டி நோபிளில் கஞ்ஜாவின் மலரைத் தாளாக்கி, லவங்கம், ஜாதிக்காய், குங்குமப்பூ, தேன் இவைகளுடன் கலந்து உபயோகிக்கின்றனர்," என Dr. மாடன் கூறுகிறார். 'பிறப்பின் பயன் சிற்றின்பந் துய்த்தல் ஒன்றே' என கருதுவோர் இதனுடன் ஏனையவஜீகரண குணமுடைய வஸ்துக்களைக் கூட்டி உபயோகிப்பர். நமது நாட்டில் கஞ்ஜா கலந்த லேகியங்களுக்குள்ள ஏற்றமும் தேவை



யும் செல்வம் படைத்த காமுகர் செம்மையாய் அறிந்த தொன்றேயாம்.

## கஞ்சாவின் தீக்குணங்கள்.

கஞ்சாவிலடங்கியுள்ள பொருள்கள் இவை இவை எனப் பகுத்துக்கூற சாஸ்த்திர ஆராய்ச்சியாளர் முயன்றதாகப்புலப்படவில்லையாயினும், விளையும் பயனைக்கொண்டு அது இத்தகையது, எனக் குறித்தல் மிகையன்றாம். "சரஸ்" யென்னும் இதன் பிசினை யுட்கொள்ளுவதால் சில தேகிகளுக்கு மன உற்சாகமும் அதிக பசியுமுண்டாவதாகச் சிலர் கூறுகின்றனர், எனினும் அளவில் சிறிது மிகினும் உன்மத்தம்போன்ற சித்த பிரம்மை, மூடுசன்னி, முதலிய கொடிய ரோகங்களை யுண்டாக்குதலுறுதி. அனுபவத்தில் கண்ட தொன்றைத்தருவாம். என்னிடம் வந்த முடக்குவாதரோகி ஒருவனுக்குமாலை 2 மணிக்கு $\frac{1}{2}$ குன்றி எடையுள்ள சரஸ் என்னுமிதன் பிசினைக் கொடுத்தேன். 4 மணிக்கு அவன் அதிகமாக பேசவும் பாடவும் துவக்கியதோடு, கடும்பசியான தென்றும், அதிக உணவு வேண்டுமெனவும், நோய் நீங்கி பூரண சுகத்துடனிருப்பதாகவும், கூச்சலிட்டான். இரவு 8 மணிக்கெல்லாம் உலக உணர்ச்சி யற்று பிணம்போல விறைத்து விட்டான். சுவாசத்தில் மாறுதலில்லை. நோயாளியின் கையை தற்செயலாய் உயர்த்தினபோது எனக்குண்டான பேராச்சரியத்திற்களவே யில்லை. அதனை எந்நிலையில் நிறுத்தினேனோ அந்நிலையில் அசையாது நின்றது. அவனைத் தூக்கி உட்காரச் செய்து அவனுடைய அவயவங்களையெல்லாம் நினைத்தவாறெல்லாம் நிற்கச் செய்தோம். மெழுகினாலான பதுமையுங் கூட அவ்வாறு நின்றிராது. பல கூறுவானேன்? பூமியின் ஆகர்ண சக்தியுங் கூட இவனிடத்து பொய்த்ததெனத் தோன்றியது. இவையனைத்தும் நிகழ்ந்த காலமெல்லாம் அவன் உணர்ச்சியற்றவனாகவே காணப்பட்டான். வெகு நீண்ட காலத்திற்குப் பின்னரே சுய உணர்வைப்பெற்றான். பொது மக்கள் பெரிதும் வியக்கு மித்தகைய இதன் குணங்களைக் கொண்டே பக்கீர்களும் சாமியார்களும் பல காரியங்களைச் செய்து ஜனங்களை ஏமாற்றுகின்றனர்" என டாக்டர் ஒஷாக்நெஸ்சி (O'Shanghnessy) கூறுகிறார்.

"காலப் போக்கிற்காக நானும் என் நேயர்களும் உட்கொண்ட 'ஹஸீஸ்' என்னும் இக்கஞ்ஜாவின்பானம், அதன் பக்தர்கள் கூறிய இனிய அநுபவங்களுக்கு முரணான பெருங் கொடுமையினையே நல்கியது. அதன் பயங்கர அநுபவங்களின் பயனாக உயிருள்ள அளவும் அதனை மற்றொரு முறை மனத்தாலும் தீண்டோம் என்ற உறுதியினைப் பூண்டோம். இக்கஞ்சா பானம் ஓர் பயங்கர விஷம். பெருமகிழ்ச்சியினை யடைவதற் கேதுவென எண்ணினோம். எம் அறிவீனத்தால் மரண வாதைகளையும் கோரமான அதன் வாயிலையும் குறுகினோம். என் நண்பர்களைவிட நான் சிறிது அதிகமாய் உட்கொண்டதால் ஒருநாளெல்லாம் உணர்ச்சியற்றுப்பிணம் போலக்கிடந்தேனும். விழித்ததும் அவயவங்களை அசைக்கவும் அசக்தனாயினேன். நாம்பு பிடிப்பினாலும், நிகழ்ந்த பயங்கர கனவுகளாலும் ஏதோ ஒரு நூராண்டு துன்பப் படுபவனைப் போல கூறொணா அலக்கணுற்றேன்."

—M. De. Sanley.

என்னும் அநுபவக்கூற்றுகள் சரஸ், ஹஸிஸ் என்பனவற்றின் கொடுமைகளைச்சுட்டுகிறது. இனி கஞ்ஜாக் குடியின் விளைவை யோர்வாம். "கொடும் பசியால் நெடுநாள் உழன்றானுக்குக் கிட்டிய அறுசுவையுண்டியை ஆவலுடன் உண்ணும் போதவனுக்கு உண்டாகும் ஆனந்தமுமல்ல. பெருந்தீனிக்காரரின் மகிழ்ச்சியுமல்ல. மிருகவின்பத்தைத்துய்க்கும் காமியின் களிப்பும் அல்ல. ஆனால் தான் கோறிய இனிய செய்தியைக்கேட்டவனைப் போலவும், உலோபிதன் பொருளை கணக்கிடுகையிலும், சூதன், தானாடுஞ் சூதில் அடுத்தடுத்து வெற்றியே சூடுகையிலும், பேரவா கொண்டவனுக்கு நினைத்த காரியங்கள் விரைவில் கை கூடுகையிலும் உண்டாகும் இன்பத்தைப் போல அநுபவத்திலேயன்றி கூறுவதற்கியலாத ஓர்வித இன்ப நுகர்ச்சியை இக்கஞ்சாவின் புகையால் பெறுகிறோம்" என அதன் பக்தர்கள் கூறினாலும், நாளடைவில் இக்குடியின் பயனாக அவருடல், மனம் இவைபெறும் பெரும் மாறுதல்களை கூர்ந்து நோக்குதல் தகுந்ததாம்.

இக்குடியின் மயக்கத்திலுள்ளபோது கால இடங்களின் உணர்ச்சியே இறந்து படுகின்றது. நாழியெல்லாம் ஊழியெனவும், நிமிடங்கள் வருடங்களென நீண்டும், முடிவில் கால, நாம, ரூப, நிற பேதங்கள் பொன்றுகின்றன. இறந்த, நிகழ், எதிர் காலங்கள் ஒன்றோடொன்று தாக்கப் பெற்று கலங்க முறுகின்றன. எண்ணங்களெல்லாம் உயர்வு நவிற்சியைப் பெறுகின்றன. மயக்கமேகங்கள் தன் புத்தியைச் சூழ்கிறதென துவக்கத்தில் உணரினும், அதனை யாட்படுத்த வியலாமல் வெகு சாமர்த்தியமாக தான் நடப்பதாக நினைத்து ஒன்றுக்கொன்று மிகைபட பிதற்றலும், கோர காரியங்களைச் செய்யவும் முற்படுகின்றனர் என்பதை கஞ்ஜா லேகியத்தை அல்லது அதன் புகையை ஒரு முறையாவது உட்கொண்டவர்களைக் கண்டார்க்கு நன்கு தெரிவதொன்றாம். ஓயாது பேசுதல், நகைத்தல், கூத்தாடல், முதலியன நிகழ்வதுடன் ஒரு சாரார் அற்பகாரணங்களால் கடுஞ்சினம் மூட்டப் பெறுபவர்களாயும் கலகமிடத் துணிபவர்களாயும் மனிதத்தன்மைக்கு ஒரு சிறிதும் ஒவ்வாத பலவேறு மிலேச்சத்தனமான காரியங்களைச்செய்யத் துணிகின்றனர்.

"பங், கஞ்சா, ஹஸிஸ் என்பவவை கூறொணாக் கொடுமைகளைச் செய்கின்றன. அவைகளின் விளைவு உண்மையில் உன்மாதத்தைத்தோற்றுவிக்கின்றன. உன்மாத வைத்திய சாலையிலுள்ளோரிற் பெரும்பாலர் இவற்றினால் உணர்ச்சியை யிழந்தவர்களே" என கனம் சாமுவேல் ஸ்மித் M. P. என்பவர் அழுத்திக் கூறுவதை நோக்கின் இவை மனிதனின் சுகவாழ்விற்கு இன்றியமையாத புத்தியின் தெளிவைக்கெடுத்து, பித்தனாக்குகிறதென்பது போதரும். நல்லன, தீயன வெனும் பகுத்தறிவினை இழப்பின், அவன் மனித மிருகம் என்பதில் வியப்பு யாதுளது? இத்தகைய இழிந்த நிலையினையோ ஆறறிவு படைத்த மனிதன் பெற முயல்வது? இது கிடக்க இனி உடலினுக்குறும் விளைவும் பயங்கரமானதே. முதற் பயனாக பெருந்தீனி கொள்பவர்களாய், பகலெல்லாம் ஓரிருண்ட இடத்தில் கூகையைப் போல கிடந்து, அஸ்தமித்ததும் இரை தேட புறப்படுகின்றனர். இக்குடியின் மிகுதியால் நாளடைவில் அங்கங்களெல்லாம் உரமிழந்து சோர்வ

டையைப் பெற்று உடல் வளம் பொன்றி, நரம்புகள் தளர்ந்து, எலும்புகள் தோன்றி, கன்னங்கள் வற்றி, கண்கள் குழி விழுந்து, ஆந்தை விழியினையும் பெற்று, கண்டோர் பயப்படுமாறு விகார உருவினைப் பெறுகின்றனர். கஞ்ஜாவின் மீதுள்ள தணியாத வேட்கையால் கையிற் காசில்லாத போது களவாடவும், இன்ப உருவினரான இளங் குழந்தைகளை இரக்கம் விடுத்து நகைகளுக்காகக்கொல்லவும் முற்படுகின்றனர்.'' 'கஞ்ஜாக் குடியன்' என்ற அளவில் நட்புதற்கு அருகதையற்றவன், ஸ்திரபுத்தியில்லாதவன் குடி வெறியில் எவற்றையும் செய்யத் துணிபவன். அற்பன்'' எனப் பெண்டிராலும், அறியாக் குழந்தைகளாலும் எள்ளி நகைக்கப்படுகிறான். உடல் பெற்றபயன் இதுவேயோ? இதன் கொடுமையினை அறிந்தும் அதன் தொடர்பினை நீக்கா ஆண்மை தானென்னே? புகையிலையில் உளதென நாம் கூறிய பல்பெரும் விஷயங்கள் அனைத்தும் ஒருங்கு கூடித்திரண்டு, பலவாயிர மடங்கு பலம் பெறின், உயிரினுக் கெத்தகைய தீங்கிழைக்க வல்லதோ, அதனை கடுகளவு கஞ்சா செய்ய வல்லதாயின் இதன் கடுமையை வாசகர்களே தெளிவார்களாக.

## விவாகத்திற்குத் தகுதியற்ற பெண்களின் இலக்கணம்.

குடிப்பிறந்திலர், பிணியுறும் இருமுது குரவர் பால் குறுகுற்றோர்,
கடுதங்கிய மிடற்று இறையாதியாம் கடவுளர் பெயர் கொள்ளாது
அடுத்த மாக்கள் தம் பெயர் பெறு பீடிலர், அலகை நாமத்தோர்,
படித்தலந்தனில் புன்னெறி சமயமாம் படுகுழிப்பட்டுள்ளோர்.

பிணியர், மூங்கையர், பங்கினர், எதிரினர், பிறர் மனைதனிற் செல்வோர்
கணிகை மாதரின் விழிப்பவர், பன்முறை காளையர் தமை நோக்கி
நணிய காதலான் முன்கடை நிற்பவர், நலம் பெற புனைகிற்போர்,
தணிவிலுண்டியர், துயில்மிகும் இயல்பினர், தன்னிலும் மூப்புற்றோர்.

ஒருமைதங்கிய கோத்திர மரபினர், உயர்ந்தவர், குறளானோர்,
பருமை தங்கிய யாக்கையர், மெல்லுருப் படைத்தவர், பயனில்லாக்
கருமைதங்கிய வடிவினர், பொன்னென கவின்றெழுகாயத்தோர்
இருமைதங்கிய பசப்பினர், விளர்ப்பினர், எருவையின் உரு மிக்கோர்.

நாணிலாதவர், ஆடவர் புணர்ச்சியின் நனியவர், நகைக்கின்றோர்,
ஏணிலாதவர், பெருமிடல் சான்றவர், இருமுது குரவோர்தம்
ஆணை நீங்கினர், சினத்தினர், இகலின் அடு திறம் முயல்கின்றோர்,
காண வேண்டினர் நடமுதலாயின, காமநூல் கவல்கின்றோர்.



ஈசன் அன்பிலர், பெருந்தகை முனிவரை இகழ்பவர், உயிர்மீது
நேசம் என்பன இல்லவர், தம் குல நெறி தன்னில் நில்லாதோர்,
மாசு தங்கிய குணத்தினர், நிறையிலார், மனமெனும் காப்பிலார்,
தேசிகன் தன்னை மனிதன் என்று உன்னினோர், தேவரைசிலையென்
[றோர்.

பத்தின் கீழ்படும் ஆண்டினர், பூத்தபின் ஆண்டு மூன்றணுகுறோர்,
ஒத்த பண்பிலர், அச்சமில் மனத்தினர், உருமென உரைசெய்வோர்,
அத்தன் அன்னை ஈந்தருளும் முன் ஒருவர் பால் ஆர்வமுற்றவர்ச்சேர
வைத்த சிந்தையர், பெரு மிதம் உற்றுளோர், மடமொடு பயிர்ப்
[பில்லோர்.]

தூறுசென்னியர் நரைமுதிர் கூந்தலர், துகளுறும் ஐம்பாலார்,
வீறு கோதையர், சின்னமார் குடுமினர், விரிதரும் அளகத்தோர்,
ஈறில் செம்மயிர்ப் பங்கியர், நிலனிடை இறங்கிய கேசத்தார்,
ஊரு சேர்தரு மோதியர், விலங்கென உரமிகு குரல் உள்ளோர்.

பிறப்பினெல்லையில் விழியிலார், தோற்றிய பின்றை இழுக்கின்றோர்
மறுப்பபின்றிடு கண்ணினர் படலிகை மயங்கிய நோக்கத்தார்
குறிப்பின் மெல்லென வெஃகியே திறித்திடுங் குருடர் சாய்நயனத்
[தோர்.
சிறப்பில் பூசையின் நாட்டத்தோர், கணத்தினில் திரிதரு செங்
[கண்ணோர்.

சிறுகு கண்ணினர், மிகநெடுந் துண்டத்தர், சேர்ந்திடு புருவத்தர்,
குறிய காதினர், உயர்தரும் எயிற்றினர், கோணுறு கண்டத்தார்,
மறுவிராவிய குகத்தினர், சுணங்குறு மணிமுலை மார்பத்தோர்,
வெறிய தாகிய நுசுப்பிலர், சிலையென வியன் மிகு வயிறுள்ளோர்,

காயநூல் முறையுரைத்திடும் இயல்பிலா கடிதட நிதம்பத்தோர்,
வாயும், அங்கையும், நகமும் உள்ளடிகளும் வனப்புறு சிவப்பிலர்,
மேயசின மயிர் பரந்திடு புதத்தினர், மென்சிறை யெகினம் போல்,
தூய நன்னடை யில்லவர், அங்குலி தொல்புவி தோயாதோர்.''

கந்த புராணம், மார்கண்டேய படலம்.

*! பத்தின் மேற்படு மாண்டினர், பூத்திடு பருவம் வந்தணுகுற்றோர்' என நூலில் இருக்கிறது. ஆனால் அறிவாளிகள் அனைவரும் இஃது இங்கு வேண்டியது அவசியமில்லையெனக்கருதுவதால் அவ்வடியை மாத்திரம் ஓர் சிறிது செய்யுளில் மாற்றப்பட்டிருக்கிறது. (பர்.)

# செய்ந்நன்றி.

நாகரீகம் நிறம்பப் பெற்றதென நினைக்கும் இக்காலத்தில் நற்குணங்களெல்லாம் நிற்குமிடமில்லாது ஒழிந்துபோக வேண்டும் போலும்! என்னே நவீனவுலகம்! நற்குணங்களை அறவே யொழித்து பல தீக்குணங்களைக் கைப்பற்றி மிக்க நல்லோர் என நிலவுலகத்தில் உலவி வரும் பெருமக்கட்கு நீதி உபதேசம் செய்யப்புகின் "செவிடன் காதில் சங்கூதியதுபோலும்" "கல்லின் மேலிட்ட கலம்போலும்" சிறிதும் பயன் படாதெனினும் பன்முறை எடுத்துக்கூறினால் 'அடிமேலடியடித்தால் அம்மியும் நகரும்' என்பதற்கிணங்க ஒரு சிறிதேனும் பயனுண்டாகுமென்ற முழு நம்பிக்கையோடு நமது வேளாள மித்திரனின் அநுமதிகொண்டு அவ்வப்போது, நாம் உணர்ந்து நடக்க வேண்டிய பலவிஷயங்களைப்பற்றி நமதுமுன்னோர் மொழிந்தனவற்றிலிருந்து எடுத்துக்கூற எண்ணங்கொண்டோம். ஓர் விஷயத்தைப்பற்றி நாம் எத்தனையோமுறை கேட்டிருப்போம். இருந்தபோதிலும், அதையே திருப்பித்திருப்பிக் கேள்வியுறுதலில்கெடுதி யொன்றுமில்லை. ஒவ்வொரு முறையும் புதிய வுணர்ச்சியுண்டாவதும், ஞாபகத்திற்கு வருவதும், இத்தனைமுறைகள் கேட்டும் நாம் அதன்படி நடக்கவில்லையே என்ற வருத்தமும், இன்பு அதைக் கைக்கொள்ள வேண்டுமென்ற ஊக்கமும் ஏற்படுமென்பதில் ஐயமில்லை. இன்னும்,

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவன்றே"

நாமே கற்றுணர்வதைவிடப்பலரால் பிரசங்கம், சஞ்சிகை முதலியவற்றின் மூலமாய்க்கேட்டறிவது பயனளிக்குமன்றே. "கற்றலின் கேட்டல் நன்று" என்பது உண்மையல்லவோ. ஆதலின் வேளாள மித்திரன் அடிக்கடி இம்மாதிரி விஷயங்களை எடுத்துக்காட்டின், அன்பர் அவன் மீது கருணை கொண்டு நன்மை கடைப்பிடித்து, தீமையை விலக்கி ஆதரிப்பார்களென வேண்டிக்கொள்ளுகிறோம்.

இம்மாதச் சஞ்சிகையில் நாம் அடிக்கடி கேள்வியுறும் "செய்ந்நன்றி" என்ற விஷயத்தை எடுத்துக்கொள்வோம்.

தனக்குப் பிறர்செய்த நன்மையை மறப்பதைவிடப்பெரும் பாவம் கிடையாது. தற்காலத்தில் அநேகர் இப்பெரும் பாவத்தைச் சிறந்த குணமெனக் கைக்கொள்ளுகிறார்கள். இதுபற்றியே நாம் இவ்விஷயத்தைப்பற்றி எடுத்துக்காட்ட நேர்ந்தது.

"செய்நன்றி" எத்தகைச்சிறப்புடைத்து என வாராய்வோம். தனக்கு முன்னொரு உதவி செய்யாதிருக்க ஒருவன் பிறருக்கு உதவி



செய்வானாயின் அதற்குக் கைம்மாறாக மண்ணுலகம் விண்ணுலகம் ஆகிய இவற்றைக் கொடுத்தாலும் போதாதாம். இதுபற்றியன்றோ தமிழ் மறையாகிய திருக்குறளும்,

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமும் மாற்றலரிது" எனமுழங்குகின்றது .

இன்னும் ஒருவனுக்கு இடுக்கண் நேர்ந்த காலத்தில் ஒருவன் செய்யும் நன்மை சிறிதளவேயாயினும் அது பூமியை விடப் பெரியதாம். திருவள்ளுவரும்,

"காலத்திற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" எனக் கூறிப்போந்தார்

செய்நன்றி, பிரதிபலன் எதிர்நோக்காத்தூய தன்மையுடைத்து. நாம் ஒருவனுக்கு நன்றிசெய்ய நேரின் அவன் நமக்குத்திரும்பி நன்மை புரிவானென்று எதிர் பார்க்கக்கூடாது.

"நன்றி யொருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொ லென வேண்டாம்"

நாம் குற்றமற்ற நன்மை புரிவோமாயின் பின்னால் பயன் தானாகவே நம்மை எய்தும். தெங்கு தானுண்ட நீரைத் தலையாலே தான் தருகின்றதல்லவோ! இம்மாதிரியே பிறர் நமக்கு நன்மை செய்தால் நாம் அவர்களுக்கு எந்நாளைக்கும் நன்றியறிவு பாராட்டி அவர்களுக்கு எவ்விதத்திலாயினும் தீமையே புரியாது நன்மை செய்ய வேண்டும்.

நாம் நன்றி செய்வதற்காக யாவருக்கும் கடமைப் பட்டிருக்கின்றோம். அதிலும் வறுமையால் வருந்தும் உறவினருக்கும், நண்பர்களுக்கும், ஏழைகளுக்கும் நாம் முக்கியமாய் நன்றி செய்யவேண்டியது, நட்பின் முக்கிய கொள்கையும் ஒருவர்க்கொருவர் செய்யும் உதவியேவாம். பலருக்கு நன்றி செய்யவேநாம் தோன்றியுள்ளோம், என்றால் யாரேனும் வாதுக்கழைப்பரோ?

நிற்க, செய்நன்றி மறப்பவர் கதி யென்னே; அந்தோ!
"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை"

செய்நன்றி கொன்றமகற்கு" என்றபடி செய்நன்றி மறப்பவர்க்கு பாவத்தினீங்கும் மார்க்கமே கிடையாதாம். ஆதலின் நாம் ஒருக்காலும் செய்நன்றி மறத்தல் கூடாது, நாம் அடிக்கடி

"நன்றி மறப்பது நன் றல்ல"

"நன்றி மறவேல்" முதலிய அமுத வாக்குகளைக் கேட்ட தில்லையா? செய்நன்றி மறத்தல் என்னும் பெரும் பாவத்திற்கு நாம் ஆளாகக்கூடாது.

இக்காலத்தில் அநேகர் அறிவின்றி பிறர் செய்நன்றி மறந்து உபகாரத்திற்கு அபகாரமும் செய்கின்றனர். இவர் தாம் ஏறிய கிளையின் அடிப்பாகத்தைத் தாமே வெட்டுகிறானன்றோ? இதை நினைக்க மிக்க துயரம் உண்டாகின்றது. நம்மிடம் நன்றி பெருமளவும் முகமன் கூறி, நன்றி பெற்றபின் நமக்கு நேராகவே இகழ்ச்சி கூறிப் பின்னும் நமக்கே தீங்கு விளைக்க நினைக்கும் புன்மையோர் கடைமக்களேயாவர். அவ்வாறே செய்து முடிப்பவர் அநேகமுளர். இத்தகைய புல்லறிவாளரைப் பூவுலகம் தன்னுடைய அபார பொறுமையால் சுமக்கின்றதுபோலும்! இறைவன் தன் நிகரில்லாக் கருணையால் இத்தகையோர் நல்வழிப்பட்டு உய்வார்களாவென ஆவலுடன் எதிர்பார்க்கிறார் போலும்! எனவே கடவுளுக்கும், உலகத்திற்கும், நல்லோர்க்கும், விருப்பந்தர விரும்பி நாம் எக்காலத்திலும் நன்மையே புரிந்து வாழ்ந்திடுவோம்.

ஆங்கில மஹா கவியாகிய ஷேக்ஸ்பியரும்

" Blow, blow, thou winter wind
Thou art not so unkind
As man's ingratitude" (As you like it)

'கொடுமையான குளிரையுண்டு பண்ணும் மிக்க குளிர்காற்றும் செய்நன்றி மறக்கும் மனிதரை விடக் கொடியதல்லவென்று அதி துயரத்துடன் பாடியுள்ளார். சாதாரணமாக இக்காலத்தில் செ நன்றி மறந்தோனைப்பார்த்து "நன்றி கெட்டோன்" "நன்றியறிவி லோன்" 'செய்ததை நினையோன்' 'செய்நன்றி கொன்றோன்' "i gratitude" 'ungrateful' எனப்பலவிதமாகத் தூஷிக்கும்வா த்தைகளைக் கர்ண கடூரமாகக் கேட்கிறோம். அந்தோ! இதுகாலத்தி கொடுமையோ!

இவ்வாறே தீக்குணங்கள் பல நம் நாட்டுள்ளோர் பலரைக் கை பற்றி அவர்களிடம் நிறம்பி ஆனந்தித்து விளையாடிக் கொண்டு வரு கின்றன. தீமைக் கோரளவில்லாது போயிற்று. நமது ஈசன் கருணை புரிந்து நமது வேளாளனைத் தாண்டி அவன் மூலமாய் அடிக்கடி இ மாதிரி [illegible] பற்றி இடித்துக் கூறுமாறு அருள் பு [illegible] து

220499

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே எண்: 220499 ப. எண்:

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.